www.tamilarangam.net


தமிழீழ புதிய சனநாயக கட்சி (தமிழீழம்)

NDPT NDPT NDPT NDPT NDPT NDPT NDPT

# தேசபக்தன்

NDPT NDPT NDPT NDPT NDPT NDPT NDPT

## ஸ்ரீலங்கா தேர்தல் பற்றிய 50 ஆண்டு புள்ளி விவரம்
## வாக்கு சதவிகிதம்




## ஆக்கிரமிப்பாளர் கையில் ஆப்கான்
## அண்டை நாடுகளில் ஆப்கான் அகதிகள்



## என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எனது கோபங்களும் உனது ஆயுதங்களும்

நானல்ல உன் விரோதி!
நீயல்ல என் எதிரி!!

நானும் நீயும்
ஒரே தாயின்
உதிரக் கனிகள்

நீ எனக்கு அண்ணன்
நான் உனக்குத் தம்பி

ஆனால்

நீ ஒரு பொலிஸ்காரன்
நான் ஒரு புரட்சிக்காரன்.

உனது
துப்பாக்கி என்னைத்
துரத்தித் திரிகிறது

எனது இதயமோ
வெடிகுண்டாய் மாறுகிறது

ஒப்புக் கொள்வோம்
நாம் விரோதிகளே!

ஆயினும்
சகோதரர் அல்லவோ!

ஒரே பாலில்
வளர்ந்தோம் அல்லவா!

ஒரே தாலாட்டில்
உறங்கினோம் அல்லவா!

ஒரே மண்ணில்
புரண்டோம் அல்லவா!

ஒரே மாதிரி
அணிந்தோம் அல்லவா!

அதனால்தான்
ஒரே மாதிரிச்
சிந்திக்கிறோமா?

"எப்போது இவனைத்
தீர்த்துக் கட்டலாம்?"

எத்தனை அன்பு!
எத்தனை பாசம்!
எப்படி இதயம்
இப்படி ஆனது?

சிம்மாசனப் போட்டியில்
சகோதரனைக் கொன்றவன்
'சாம்ராட்' ஆனதாய்ச்
சரித்திரம் உண்டு.

நமக்கோ

தாயின் இதயத்தைத் தவிர
வேறெந்த ஆசனம் இருந்தது?

எந்தச் சொத்துக்காக நாம்
எதிரிகளானோம்?

எப்படி நமக்குள்
பகைமை எழுந்தது?

திருடரின் கோஷமும்
தேசிய கீதமும்
தழுவி மயங்கும்
அசுர நாட்களில்
ஒரு தாலாட்டு நம்மைச்
சகோதரராக்கியது;
ஒரு தேசிய கீதம் நம்மை
விரோதிகளாக்கியது.

தாகூர் என்னும்
மகாகவியின்
ஆத்மா இசைத்த
அமுத கீதம்
எந்த உதடுகள்பட்டு
விஷமாகிப் போனதோ
அந்த உதடுகளில்
விரயம் செய்தாய்?

தொடர்ச்சி 9-ஆம் பக்கம்...

www.tamilarangam.net



# நெருக்கடியில் "நாடாளுமன்ற அதிகாரம்" வன்முறை உச்சத்தில் "தேர்தல் சனநாயகம்!"

சிறீலங்காவின் 12-வது நாடாளுமன்றத் தேர்தல் மார்கழி (டிசம்பர்)5-இல் நடைபெறவுள்ளது. 5 ஆண்டு ஆயுள் கொண்ட நாடாளுமன்ற அதிகாரம் - தேர்தல் சனநாயகம். ஆளும் கட்சிகளின் - கூட்டணிகளின் பலத்தைப் பொறுத்து காலம் தீர்மானிக்கப்படுகிறது. அல்லது தேர்தல் முடிந்து ஓராண்டுக்குள்ளேயே கலைக்கப்படுகிறது. 1975-இல் நாடாளுமன்ற அதிகாரத்தை - தேர்தல் சனநாயகத்தை, உலகின் முதல் பெண் பிரதமர் **சிறீமா**. 5 ஆண்டு முடிந்த பின்னும் நாடாளுமன்ற அதிகாரத்தை நீட்டித்தார். **சிறீமாவின் மகள் சந்திரிகா** புத்தாயிரம் ஆண்டில் நடந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிந்து, ஓர் ஆண்டு ஆவதற்குள் நாடாளுமன்றத்தை கலைக்க வேண்டிய நிலைமைக்கு சிறீலங்காவின் நாடாளுமன்ற தேர்தல் சனநாயகம் பரிணாம வளர்ச்சி கண்டுள்ளது. கூட்டணி அமைக்காமல் நாடாளுமன்ற அதிகாரத்தை கைப்பற்ற முடியாது. ஆட்சியில் கூத்தடிக்க முடியாது. குழப்பமுடியாது என்ற அளவுக்கு ஆளும் கட்சிகளுக்குள் நெருக்கடியும், குழப்பமும் அதிகரித்துள்ளது. ''நெருக்கடி'' என்ற வார்த்தையை விட வேறு எதுவும் பேசாத, சிறீலங்கா ஆளும் வர்க்கக் கட்சிகள் ஓராண்டுக்குள், மீண்டும் தேர்தல் சனநாயகத்தைக் காட்டி நாட்டு மக்களின் தலையில், 500 மில்லியன் ரூபா தேர்தல் செலவை மேலும் சந்திரிகா அரசு சுமத்தியுள்ளது.

225 நாடாளுமன்ற உறுப்பினர்களை தேர்வு செய்வதற்கான போட்டியில் 4000 வேட்பாளர்கள்; பதிவு செய்யப்பட்ட 16 அரசியல் கட்சிகளும், சுயேட்சைகளும் தேர்தல் களத்தில் குதித்திருக்கின்றனர். நாடாளுமன்ற ஆசனங்களை கைப்பற்றுவதற்கான தேர்தல் சனநாயகப் போட்டியில் இன்றுவரையில் 1000-க்கும் மேலான **வன்முறைச் சம்பவங்கள்** பதிவு செய்யப்பட்டுள்ளது. தேர்தல் சுவரொட்டிகளை கிழிப்பது, பிரச்சாரக் கூட்டங்களை கலைப்பது, வேட்பாளரை பயமுறுத்துவது, கடத்துவது, பணயம் வைத்து பணம் கோருவது, கொலை செய்வது எனத் தொடர்கின்றது. தேர்தல்வழி நாடாளுமன்ற அதிகாரத்தை கைப்பற்றுவதற்குக்கூட **வன்முறை** (பயங்கரவாதமா?) அவசியமாகிவிட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''தமிழ்ப் பயங்கரவாதிகள் தான் தேர்தல் வன்முறை செய்வார்கள். அரசியல் தலைவர்களை கொலை செய்வார்கள்'' என்று கூறி வந்தது சிறீலங்கா அரசு. சிங்கள ஆளும் கட்சிப் பயங்கரவாதிகளும் இதில் தாமும் சளைத்தவர்கள் இல்லை என்பதை கடந்த தேர்தல்களில் மக்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளனர். ஆளும் கட்சி - எதிர்க் கட்சித் தலைவர்கள் ஒரு பகுதிமேல், மற்றைய பகுதி, எதிர்த்தரப்பு புலிகளுடன் சேர்ந்து தங்களைக் கொல்ல முயல்கின்றனர் என அனுதாப ஆதரவுப் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர். மறுபக்கம் புலிகளுடன் சேர்ந்து சிங்கள தேசத்தை தமிழர்களுக்கு பிரித்துக் கொடுக்கப் போகின்றனர். (UNF Dr. ஜெயத்திலகா - புலிகள் இரகசிய உறவு) என இனவாதத்தை தூண்டும் பிரச்சாரம் நடக்கிறது; ஒரு கண்ணை இழந்த சந்திரிகா பாதுகாப்பு நெருக்கடியால் செயற்கைக் கோள் வழியாகப் பிரச்சாரம் செய்கிறார். மறுபுறம் ரணில் விக்கிரமசிங்கா தன்னைக் கொல்ல உளவுத் தயாரிப்பு நடப்பதாகக் கூறி தனக்கான பாதுகாப்பை அதிகரிக்க பொலிஸ்மா அதிபரிடம் கோரியுள்ளார். 10 ஆண்டுகளுக்குப்பின் London-இல் இருந்து திரும்பி வந்துள்ள JVP தலைவர் புலிகளை எதிர்த்துப் போராட அரசுக்கு 50,000 சிங்களவர்களை அணிதிரட்டி தருவதாக அறிவிக்கின்றன.

தேர்தல் பிரச்சாரம் கொள்கைகள் இன்றிகொள்ளையர்களின் அதிரடி இனவாத மற்றும் அனுதாபப் பிரச்சாரங்களில் கொடிகட்டிப் பறக்கிறது.

தேர்தல் சனநாயகத்தில் பங்குபற்றும் ''சனநாயக அரசியல் கட்சி'' களின் தேர்தல் வன்முறைகளையும், 9800 வாக்களிப்பு நிலையங்களையும் பாதுகாக்க 40,000 பொலிசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அரசியல் கட்சிகளின் ஆயுதங்களை, தேர்தலுக்காக களைவது, வாக்களிப்பு வன்முறைகளை தவிர்ப்பது, நாடாளுமன்ற சனநாயகத்தின் மீது மக்களுக்கு அவநம்பிக்கை ஏற்படுவதை தவிர்ப்பது என தேர்தல் ஆணையர் தயானந்த டி.சில்வா, கட்சித் தலைவர்களை கூட்டி கல்வி புகட்டுகிறார். தேர்தலைக் கண்காணிக்க 8000 உள்நாட்டுக் கண்காணிப்பாளர்கள், அய்ரோப்பிய ஒன்றியம் -50, இந்தியா-7, அமெரிக்கா, யப்பான், ஒஸ்திரேலியா என அந்நிய நாடுகள், உலக நிறுவனங்கள் கண்காணிக்க வேண்டியளவுக்கு உள்நாட்டுத் தேர்தல் சனநாயகம் நம்பிக்கை அற்றதாகிவிட்டது. தேர்தல்களில் கூட ஆளும் கட்சிகளின் அராஜகம் கோலோச்சுகின்றது. நாடாளுமன்ற தேர்தல் சனநாயகப் பாதை வன்முறை இன்றி வாழமுடி

www.tamilarangam.net



யாது என்ற நிலையை ஆளும் வர்க்கக் கட்சிகளே உருவாக்கிவிட்டார்கள்.

1977-இல் ஆட்சிக்கு வந்த U.N.P. கட்சி, திறந்த உலக பொருளாதாரக் கொள்கையை (OEP) அமுல்ப்படுத்த தொடங்கியது. உலகமயமாக்கல் கொள்கை - நடைமுறைகளால் முழுநாடும் மிகப் பெரிய அரசியல், பொருளாதார, பண்பாட்டு நெருக்கடியை நோக்கி நகர்த்தப்பட்டது. 1978-இல் நாடாளுமன்றத்தின் அதிகாரத்தைவிட, அதிகாரம் கூடிய சனாதிபதி முறை அறிமுகம் செய்யப்பட்டது. மக்களை மட்டுமல்ல எதிர்கட்சிகளையும் நசுக்கத் தொடங்கினார் ஜே.ஆர். ஜெயவர்த்தனா. 1948-இல் மலையகத் தமிழ் மக்களின் குடியுரிமை, வாக்குரிமையை பறித்த U.N.P. அரசு. 78-இல் எதிர்க்கட்சி தலைவரான சிறீமாவின் வாக்குரிமைக் குடியுரிமையை பறித்தது.

*சிறீலங்காவின் ஆளும் வர்க்க இன, மதவாதக் கட்சிகள், தங்களின் திறந்த பொருளாதார, உலகமயமாக்கல் கொள்கையால், அந்நிய - உள்நாட்டுக் கூட்டுக் கொள்ளையர்களால், நாடு முழுவதும் எதிர் கொண்ட பொருளாதார - அரசியல் நெருக்கடிகளை மறைக்க, உள்நாட்டு மக்களை திசைதிருப்ப! இனவாதத்தை, மதவாதத்தை, தேசியவெறியை சமூகமயமாக்கினர். விளைவு தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் - விடுதலை யுத்தமாக வளர்ந்தது. நாடு எதிர்கொண்டுள்ள எல்லாவகையான நெருக்கடிக்கும் 'யுத்தமும் - தமிழ்ப் பயங்கரவாதமும்' தான் காரணம் என மீண்டும் மக்களை திசை திருப்பின ஆளும் வர்க்கக் கட்சிகள். முழுநாடும் இராணுவமயமாக்கப்பட்டது. யுத்தம் மிகப் பெரிய தொழிலாக்கப்பட்டது. யுத்தம் தமிழ், சிங்கள மக்களை நாட்டை விட்டு வெளிநாட்டுக்கு துரத்தியது. அகதிகள் அன்னியச் செலாவணியை ஈட்டித்தரும் பிரிவினராக மாற்றப்பட்டுள்ளனர்.*

சமாதானத்திற்கான யுத்தம்,
யுத்த நிறுத்தம்,
பேச்சு வார்த்தை,
சமாதானம்,
சனாதிபதி முறை ஒழிப்பு,
அமைதி,

நாட்டின் முன்னேற்றம் என்ற பிரச்சார யுத்தத்தின் மூலம் "விதவைகளின் கண்ணீரை விதவை அறிவாள்" என்ற இலட்சிய முழக்கத்துடன் வந்த சந்திரிகாவும், அவர் தலைமையிலான SLFPயும் 1994-இல் தேர்தலில் குதித்தனர். பொதுசன முன்னணி (PA) ஆட்சியை கைப்பற்

www.tamilarangam.net



றியது. UNP கொண்டுவந்த உலகமயமாக்கல் கொள்கையையும், தமிழ் இன ஒடுக்குமுறை யுத்தத்தையும், சந்திரிகாவும் (PA) பொது சன முன்னணிக் கட்சிகளும் முதன்முறையாக தலைமை ஏற்று நடத்தினர். **தாய் சிறீமா** பிரதமரானார். **மகள் சந்திரிகா** சனாதிபதியானார். அதிகா ரத்தில் உட்கார்ந்தபின் J.R. போன்று எல்லாவற்றிலும் ஏகபோக ஆட்சி நடத்தினார்கள். நாட்டில் ஒன்றும் புதிதாக நடந்துவிடவில்லை.

சிறீலங்கா நாடாளுமன்ற சனநாயகமும் - அதிகாரமும், புதிய நூற்றாண்டில் தொங்கு நாடாளுமன்றத்தில் கேலிக் கூத்தாக்கப்பட்டது. **'யுத்தம் - சமாதானம்'** பற்றிய அரசியல் - இராணுவ, இராஜ தந்திரி களின் சூழ்ச்சிகளை, சாமானிய மக்களும் புரிந்து கொண்டனர். இன வாத அரசின் ஒடுக்குமுறை யுத்தத்தில் பலியான - காணாமல் போன வர்களின் பாதுகாப்பு இயக்கம், தமிழ் மக்களிடமும் சிங்கள மக்களி டமும் கூட வெளிப்பட்டது, யுத்தத்தின் வேர்பற்றிய விழிப்புணர்வு விசாலமானது; போராட்டம் வீதிக்கு வந்துள்ளது.

மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பலத்துடன் அரசியல் சாசன மாற்றங்களைச் செய்து, பின் மக்களிடம் வாக்கு எடுப்பு நடத்திச் செய்ய வேண்டிய **அரசியல் சாசனத் திருத்தங்களை**; நேரடியாக மக்கள் வாக்கு எடுப்பு நடத்தி மாற்றம் கொண்டு வருவதாக சந்திரிகா அரசு நாடகம் ஆடியது. நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மைக்கே *(225-இல் 115)* திக்குமுக்காடிய சந்திரிகா, சிறீலங்கா முசுலீம் கொங்கி ரசில் (SLMC) ஒரு பிளவை ஏற்படுத்த சூழ்ச்சி செய்தார். அதுவே அவரின் ஆட்சிக் கலைப்புக்கு தொடக்கவிழாவாகியது. SLMC-இன் ஒரு பகுதி எதிர்க்கட்சி பக்கம் சேர்ந்தது. தொங்கு நாடாளுமன்றத்தின் மீதான, நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை எதிர் கொள்ள முடியாத சனாதிபதி சந்திரிகா, நாடாளுமன்றத்தை ஒத்தி வைத்தார். ஒரு ஆண்டுக்குள் நாடாளுமன்றத்தை கலைக்க முடியாத நெருக்கடியில் நின்றார். நாடாளுமன்றத்தைவிட அதிகாரம் கூடிய சனாதிபதி ஆட்சி முறையைக் கொண்டுவந்த UNP கட்சி. நாடாளுமன்றத்தின் முன்னே, நடுத்தெருவில் உட்கார்ந்து நாடாளுமன்ற சனநாயகத்தைப் பற்றி, சனாதிபதியின் அதிகார துஷ்பிரயோகம் பற்றிப் பேசியது. நாடே நகைத்தது.

இனவாத இடதுசாரிக் கட்சியான (JUP) உடன் சேர்ந்து, சந்திரி காவின் பொதுசன முன்னணி (PA) ஓராண்டு ஒப்பந்தம் போட்டது. நாடாளுமன்றம் கூட்டப்பட்டது. மீண்டும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தது UNP இம்முறை SLFPU கட்சிக்குள்ளேயே

www.tamilarangam.net



சந்திரிகா மீது நம்பிக்கை இல்லாதவர்கள் கூடி விட்டனர். கடைசி ஆயுதம் சனாதிபதி சந்திரிகா, நாடாளுமன்றத்தை கலைத்தே விட்டார். புதிய தேர்தலுக்கு தேதி குறித்துள்ளார். அரசியல் விழிப்புணர்வுள்ள மக்கள் முன் நாடாளுமன்ற தேர்தல் சனநாயகத்தினதும், பணநாயக அரசியலினதும், அரசியல்வாதிகளினதும் முகம் அம்பலப்பட்டு போயுள்ளது.

*1994*-இல் சனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்க அவதாரம் எடுத்த சந்திரிகாவை *2001*-இல் சனாதிபதி அதிகாரம் காப்பாற்றிவிட்டது. எல்லாமே தேர்தல் வாக்குறுதி என்பதற்கு மீண்டும் சந்திரிகா அள்ளி வீசி இருப்பவற்றைக் கவனியுங்கள்.

★ *20 ஆண்டுகளுக்கு முன் பொது வேலை நிறுத்தத்தில் வேலை இழந்தவர்களில் 2000 தொழிலாளர்களுக்கு 25000/- வீதம் நிவாரணம்.*

★ *வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள 24000 குடும்பங்களுக்கு மேலதிகக் கொடுப்பனவு வழங்குதல்.*

★ *நூற்றுக்கணக்கானவர்களை புதிய வேலைகளில் அமர்த்தியுள்ளது. பலருக்கு பதவி உயர்வு வழங்கியுள்ளது. பொலிஸ் துறையில் இது பெரும் சர்ச்சையை கிளப்பியுள்ளது.*

★ *ஆயிரக்கணக்கான தற்காலிய ஊழியர்களை நிரந்தரமாக்கியுள்ளது.*

★ *இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC) 10% மண்ணெண்ய் விலை குறைப்பு செய்துள்ளது.*

சந்திரிகாவின் (PA) கூட்டணியில் உள்ள EPDP கட்சியின் தலைவர் டக்ளஷ் தேவானந்தா வடக்கு கிழக்கு புனரமைப்பு அமைச்சராகவுள்ளார். அவர் யாழ்பாணத்திலுள்ள கோயில்களை புனருத்தாரணம் செய்ய பெருமளவு பணம் ஒதுக்கியுள்ளார். புனரமைப்பு அமைச்சில் உள்ள ஊழியர்களுக்கு மேலதிகக் கொடுப்பனவுக்கு காசோலை கொடுக்கப்பட்டுள்ளது. 5-ம் திகதி தேர்தல் ஆனால் காசோலை மார்கழி 7 என திகதியிடப்பட்டுள்ளது. (வாக்கு வேட்டை தொழில் நுட்பம் எப்படி இருக்கிறது) தனது கூட்டணியை தேர்தலில் வெற்றி பெற வைக்க, நிதி அதிகாரம், வாக்குறுதி என்ற மூன்றையும் சனாதிபதி சந்திரிகா பயன்படுத்துகிறார். ஆனால் அன்னிய நாடுகளும், (WB) உலக நிதி நிறுவனங்களும் JVP போன்ற கட்சிகளின் நாடாளுமன்ற நுழைவு கூட்டணி பற்றி எச்சரிக்கின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



*நாடாளுமன்ற உறுப்பினர்களில் 1/3 பங்கினர், 40 வயதுக்கு கீழ்ப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்ற சட்டவிதி பற்றி பல்கலைக்கழக மாணவர்கள், அரசியல் கட்சிகளை, தேர்தல் ஆணையகத்தை வற்புறுத்துகின்றனர். உலகின் முதல் பெண் பிரதமர் தோன்றிய நாட்டில், பெண்கள் கல்வியிலும் வேலையிலும் அதிக அக்கறை காட்டும் நாட்டில், யுத்தத்தில் கூட பெண்கள் முக்கிய பங்காற்றும் நாட்டில், 51% பெண்கள் தொகையுள்ள நாட்டில் 4% ஆன பெண்களே நாடாளுமன்ற அதிகாரத்தில் உள்ளனர். (இந்தியாவில் கூட 33% ஒதுக்கீடு கொடுக்கப்படவுள்ளது) இந்தளவுக்கு அரசியல் கட்சிகள் ஆளும் வர்க்கக் கட்சிகள் மட்டுமல்ல. ஆண் ஆதிக்கக் கட்சிகளாகவும் உள்ளன. தேசிய சமத்துவம் பேசும் கட்சிகள், கூட்டணிகள் கூட தேர்தல் வாக்குறுதிகளில் கூட இதுபற்றிப் பேசுவதில்லை.*

12-வது நாடாளுமன்றத் தேர்தலில் பொது சன முன்னணி (PA) வெற்றி பெறாவிட்டால் UNP வெற்றி பெற்றால், நாடாளுமன்ற ஆட்சி அதிகாரமும் — சனாதிபதி ஆட்சி அதிகாரமும் எதிர் எதிர்க்கட்சிகளின் கைகளில் மோதிக் கொள்ளப் போகிறது. இதுபற்றிய வாத விவாதங்கள் நாடாளுமன்ற அரசியல் கட்சி அறிவு ஜீவிகள், அதிகார வர்க்கத்தின் சட்ட மேதைகள் மத்தியில் தொடங்கிவிட்டது. பிரான்சில் இருப்பது போன்ற அமைப்புப்பற்றி பேசப்படுகிறது. இந்த சிறீலங்கா நாடாளுமன்ற நெருக்கடியை பயன்படுத்தி தமிழீழ மக்களின் தேசிய. இனப் பிரச்சினையை தீர்த்துவிடமுடியும் என ''தமிழ்த் தேசிய ஒற்றுமைக் கூட்டணி'' (TNA) தமிழீழ மக்களை ஏமாற்றுகிறது; சிறீலங்கா சிங்கள இனவாதக் கட்சிகள், கூட்டணி இன்றி தாங்கள் நாடாளுமன்ற அதிகாரத்தில் உயிர் வாழ முடியாது என்பதைப் புரிந்துள்ளன. அதேவேளை தமிழ், முசுலீம், மலையக ஆளும் வர்க்க தரகு அரசியல் கட்சிகள் தாங்களும் கூட்டணி அமைத்து பலமாக இருந்தால்தான், ஆளும் கட்சியால் மதிக்கப்படுவோம், பேரம் பேச முடியும் என்பதையும் புரிந்து கொண்டு தேர்தல்களத்தில் **''தேசியம்''** பேசிக் கொண்டு குதித்திருக்கின்றன.

ஆளும் கட்சி மீது, எதிர்க்கட்சிகளால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் மட்டுமே கொண்டு வரமுடியும்.

**ஆளும் கட்சி மீது, எதிர்கட்சி மீது மட்டுமல்ல நாடாளுமன்ற தேர்தல் சனநாயகத்தின் மீதே நம்பிக்கை இழந்துவிட்ட தமிழீழ மக்களும் - சிறீலங்கா மக்களும் இரண்டாவது சுதந்திரப் போருக்கு தயாராகிவிட்டனர்.**

**— ஆசிரியர் குழு**

www.tamilarangam.net



2-ம் பக்கத் தொடர்ச்சி

மமதைச் சிரிப்பு
மலர்வதற்காகவா
உனது
வாலிப நாட்களை
விரயம் செய்தாய்?

சகோதரனே!
உனது
முகத்தை என்றேனும்
பார்த்ததுண்டா நீ?
புன்னகை என்பதை
அறிவாயா நீ?

அன்னையின் முத்தங்களால்
ஆசீர்வதிக்கப்பட்ட
எந்த முகமும்
இப்படி இராதே!

மனித அரும்புகளாய்
மடியில் கிடந்து
பறவைகள் போல் நாம்
பேசிய நாட்களில்
கனவுகளோடும்
நம்பிக்கையோடும்
எப்படியெல்லாம்
தாய்மை அணைத்தது!

அந்த
உதட்டில் மலர்ந்த
உன்னதக் கவிதையில்
பிரபஞ்சமே நெகிழ்ந்து
உருகிப் போனதே!

இன்றோ -

ஓநாயின் வெறித்த
பார்வை போலவும்
பாதிரியாரின்
புன்னகை போலவும்
ஓ.... உனது
முகமெல்லாம் எப்படிக்
குரூரமாய்ப் போனது!

கண்ணீராலும்
புன்னகையாலும்
காதலினாலும்
பாசத்தினாலும்
உருகும் இதயமே
மனித இதயம்!
மனித இதயம்!

நீயோஉள

இதயத்தை உனது
பூட்சுக் கால்களில்
மிதித்துக் கொண்டு
கடமை என்கிறாய்.

கோழியின் கால்களைக்
குஞ்சுகள் சுற்றுவதுபோல்
நம்
தந்தையை நம்பித்
தம்பிகள் உண்டே!

சிறகு முளைக்காத இந்தச்
சின்னஞ் சிறுசுகள்
பறக்கும் நாள்வரை
பாதுகாப்பது
யார்?

பாசம் அவரைப்
போராட வைத்தது
பாழும் இடி அவர்
தலையில் வீழ்ந்தது

இடியாய் விழவா
முந்திப் பிறந்தாய்?

இடியைச் சுமந்தவள்
இடிந்து போனாளடா...

தந்தையை மகனே
சுட்டுக் கொல்வதும்
தம்பியை அண்ணன்
துரத்தித் திரிவதும்
கடமை என்றெவன்
கற்பித் தானடா?

தாயைக் கொன்றொரு
நாயை வணங்குதல்
தேசபக்தி என்று
எவன் சொன்னானடா?

www.tamilarangam.net



நம்
அன்னையின் மாங்கல்யம்
அறுபட்ட போதுதான்
உன் மார்பிலே வீரப்
பதக்கம் அணிந்தாய்!

இன்னும் எத்தனை
பதக்கங்கள் அணிவாய்?
இன்னும் எத்தனை
உயிர்களைக் கொல்வாய்?

துப்பாக்கி ஏந்திய சோதரனே
கொஞ்சம்
சூரிய ஒளியை ஏற்கப் பழகு!

பறவைகளைப் பார்!
விலங்குகளைப் பார்!

விதைத்தனவா அவை?
அறுத்தனவா அவை?

வேளை உணவுக்கு
வீறிட்டழுததாய்க்
காக்கைக் குருவியைக்
கண்டதுண்டா நீ?

பட்டினி கிடந்து
செத்துப் போனதாய்
புழுவையாகிலும்
காட்டமுடியுமா?
வையம் மலர்ந்ததும்
தெய்வங்கள் எழுந்ததும்
மனிதக் கரங்களின்
மகத்துவத்தாலே!

ஆனால்
மண்ணின் மீதொரு
சொர்க்கம் எழுப்பிய
மனிதன் மாத்திரம்
மலிவாய்ப் போனதேன்?

வேலை கேட்பதும்
கூலி கேட்பதும்
தீவிர வாதம்;
சட்ட விரோதம்!

பிச்சை எடுப்பது
பாரத நாட்டின்
பெருமையைக் குலைப்பதால்
சட்ட விரோதம்

பட்டது போதும்
பட முடியாதினி
பாழும் உயிரே
போய்த் தொலை என்று
விட்டெறிந்தாலும்
சட்ட விரோதம்!

என்ன செய்வதாம்
இந்திய மக்கள்?
என்று
கேள்வி கேட்பதும்
சட்ட விரோதம்!

எத்தனை வழிகளில்
மானுடம் இங்கே
இழிவும் இம்சையும்
ஏற்று நிற்கிறது!

சாபங்களுக்கு மட்டும்
சக்தி இருந்தால்
சாம்பலாய்த்தானே
இந்தியாவை அள்ளலாம்!

இங்கே
வாழ்க்கை என்பதே
ஆயுள் தண்டனை
மரணம் மட்டுமே
பூரண விடுதலை

"எழுதி முடித்த
கதைகளிளெல்லாம்
இதுபோல் சோகம்
எதிலே இருந்தது?"

இந்த

சோகக் கதையை
மாற்றி எழுதும்
தேசாபிமானமே
புரட்சியின் வித்து!

www.tamilarangam.net



புரட்சியின் வைகறை
புலர்கின்ற வேளையில்
மலர்ந்து விரியும்
மானுட நெஞ்சங்கள்

இந்தச்

சிவப்பு மலர்களை
உதிர்த் தெறிவாயோ?

விலங்குகளால் எங்கள்
கைகளைப் பிணைத்தீர்கள்!
ஒரு
விடுதலைக் கீதம் எங்களைத்
தோழர்களாய் இணைத்தது.

தோழமைக் கரங்கள்
ஆர்த்தெழும் போது உன்
துப்பாக்கி வெடியா
வழியை மறிக்கும்?

பிராமிதியஸின் பெருமூச்சில்
பிரளயமே உருவாகும்
ஈசல்களா அதை
எதிர்த்து நிற்கும்?

இனி சபிக்கப்பட்டமுத
பாவிகள் அனைவரும்
சொர்க்கத்தின் கதவை
உடைத்தெறிவார்கள்.

கடவுளின் சிம்மாசனம்
கவிழ்த்தெறியப்படும்!

மனிதக் கரங்கள்
மறுதீர்ப் பெழுதும்!

அடிமை சனங்களின்
தலைகளை மட்டுமா
கில்லட்டினுக்கு
வெட்டத் தெரியும்?

தோழன் பாலுவின்
ஜீவனை மட்டுமா
தூக்குக் கயிற்றுக்குத்
துண்டிக்கத் தெரியும்?

மாரி மணவாளன்
மார்பினை மட்டும்தான்
துப்பாக்கி ரவைக்குத்
துளைக்கத் தெரியுமா?

சேலம் சிறையில்
ரோஜா முளைக்கும்;
சேரிகளுக்கும்
சூரியன் உதிக்கும்!

இந்தக் குருக்ஷேத்திரத்தில்
சூரிய குலத்தின்

ஜெயக்கொடி ஏந்திய
தோழர்களுடனே
அணிவகுத்திருப்போர்
அன்னியர் என்றா
ஆயுதம் தரித்தாய்?

வாழ்வைத் தொலைத்தோர்
வஞ்சிக்கப்பட்டோர்
சிரிப்பொரு தொழிலாய்
ஜீவனம் செய்வோர்
விடியலைத் தரிசிக்க
வீதிக்கு வந்தோர்...

யாரென நினைத்தாய்?
பாரிவர் முகத்தை!

இவர்கள் அல்லவோ
உனது சொந்தம்!
இவர்கள் அல்லவோ
உனது ரத்தம்!

இவர்கள் அல்லவோ
உனது வர்க்கம்!
இனியுமா நீ
எதிரிகள் பக்கம்?

உனது ரத்தமும்
உனது சதையும்
அக்கிரமங்களால்
அடக்கப் படுகையில்
விடுதலையுணர்வில்
விம்மி எழுகையில்
வேட்டை நாயாய்ப்
பாய்வது நீயா?

www.tamilarangam.net



தனது குட்டிகளைத்
தானே தின்பது
பன்றிக்கும் நாய்க்கும்
பழக்கமாய் இருக்கலாம்.
பன்றியாய் நாயாய்ப்
பிறந்தவன் அல்லவோ
சொந்த வர்க்கத்தைச்
சூறையாடுவான்.

தனது கண்களைத்
தனது கைகளே
பிடுங்கி எறியுமோ?
எறிகிறாயடா...

எனது ரத்தத்தில்
உனது கைகளும்
உனது ரத்தத்தில்
எனது கைகளும்
நனைக்கப்படுவது
மனுஷ தர்மமோ?

கூலி அடிமைகளாய்
நாங்களும்
கொடிய
ஆயுதம் தாங்கும்
அடிமையாய் நீயும்
நிச்சயிக்கப்பட்டுவிட்ட
அடிமைச் சாசனத்தில்
இதுவே தர்மம்!
இதுவே நம் கர்மம்!

இன்று-

மான்களும் நாம்;
வேட்டை நாய்களும் நாம்!

ஓடித் திரிவதும் நாம்;
நம்மைத்
தேடித் திரிவதும் நாம்;
பயந்து
காட்டிக் கொடுப்பதும் நாம்;
தூக்கில்

கட்டி முடிப்பதும் நாம்!

சாட்டையும் நாம்;
வீசி
அடிப்பதும் நாம்;
துடித்து
அழுவதும் நாம்!

நமது வாள்...
நமது கை...
நமது தலை...

ஆ...

அடிமைத்தனத்தின்
அக்கினி நாக்குகள்
நமது
உணர்வுகளையும் அல்லவா
பொசுக்கி விட்டன!

நம்மை
அடிமை கொண்ட அந்தக்
கேவலமானவர்களுக்காக
நமது
சோதர ரத்தத்தை
எவ்வளவு
தாராளமாய்ச் சிந்துகிறோம்!

சோதரனே, ஏன்
யோசனை செய்கிறாய்?

பழையதை மறப்போம்;
புதுநெறி வகுப்போம்!

மனித உறவுகள்
மறுக்கப் படுவதும்
சோதர ரத்தம்
சிந்தப் படுவதும்
தர்மத்தின் பெயரால்
நடைபெறுமென்றால்
கண்ணனைக் கொல்வோம்;
கர்ணனை மீட்போம்!

எனது கோபங்களும்
உனது ஆயுதங்களும்
ஒரே திசையில்
முழங்குவதாக!

www.tamilarangam.net



# தமிழ்த் தேசிய ஒற்றுமைக் கூட்டணி தமிழீழ தரகுக் கட்சிகளின் 'தேர்தல்கால தேசியம்' வரலாற்றில் மீண்டும் ஒரு ஏமாற்று நாடகம்

1973 செப். 9-இல் தமிழ்த் தரகு முதலாளித்துவ கட்சியான தமிழரசுக் கட்சி. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து மல்லாகத்தில் தீர்மானம் நிறைவேற்றியது. 1976 மே 16-இல் தமிழரசுக் கட்சி, இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் (ACTC) இலங்கை தொழிலாளர் கொங்கிரசு (CWC) மூன்றும் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF) உதயமானது. தமிழீழம் கோரிக்கை வட்டுக் கோட்டையில் தீர்மானம் செய்யப்பட்டது. 1977 தேர்தலில் அமோகமான வெற்றி பெற்றது. நாடாளுமன்றம் சென்றதுடன், TULF எல்லாத் தீர்மானங்களையும் கைவிட்டது. மூன்று கட்சிகளும் மீண்டும் தனித்தனியாக இயக்கத் தொடங்கியது, தமிழரசுக் கட்சி மட்டும் தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF) என கட்சிப் பெயர் மாறியது. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை கைவிட்டு, தனித் தமிழீழக் கோரிக்கையை காற்றில் பறக்கவிட்டு, தமிழ் மக்களுக்கு துரோகம் செய்து ஏமாற்றி நாடாளுமன்ற அதிகாரத்தில் மூழ்கின. மாவட்ட சுயாட்சி திட்டத்தை ஏற்க்கின்ற இழி நிலைக்குச் சென்றன. சிங்கள இனவாதக் கட்சிகளுடன் சமரசம் செய்து கொண்டு, சிறீலங்கா நாடாளுமன்ற முறைக்குள், தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைகளை தீர்க்க முடியும் என, தமது தமிழ்த் தரகு மூதாதையர்கள் போன்று தமிழர்களை ஏமாற்றினர்.

புதுக் கொலனிய இலங்கையின் வரலாற்றில் மாறி மாறி, ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றி வந்த இனவாதக் கட்சிகளான UNP, SLFP இன் இன ஒடுக்குமுறையையும், தமிழ் தரகு முதலாளித்துவ கட்சிகளின் தேர்தல் கால இனவெறியூட்டல்களின் ஏமாற்றுகளையும், நாடாளுமன்றம் செல்வதன் மூலம் தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது என்பதையும் முன்னிறுத்திய **தேசிய விடுதலைப் போராட்ட இயக்கங்கள்.** நாடாளுமன்றப் பாதையை நிராகரித்தன. தேர்தல்களை பகிஷ்கரித்தன.

☞ *சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தனித்தமிழீழம் தான் ஒரே தீர்வு என தீர்மானித்தன.*

☞ *ஆயுதப் போராட்டம் மூலமே (பலாத்காரப் புரட்சி) தமிழீழத்தை வெல்ல உறுதி எடுத்தன.*

☞ *தரகு முதலாளித்துவ கட்சிகளை நிராகரித்து தமிழீழ தேசிய இயக்கங்களை நிறுவின. சுதந்திரமான சுயசார்புள்ள 'சோசலிச தமிழீழம்' என முழங்கின.*

www.tamilarangam.net



சிறீலங்கா அரசுக்கு எதிரான, தமிழீழ இலட்சியத்தை அடைவதற்கான ஆயுதப் போராட்டத்தை தொடர்ந்தன. தேர்தல்களை புறக்கணித்தன. தேர்தல்களில் நின்றவர்களை தேசியப் போராட்டத்தின் துரோகிகள் எனக் கூறி சுட்டுக் கொன்றன. அதன்பின் தமிழீழ ஆயுதப் போராட்ட தலைமைகள் பல, 1987 ஜூலை 19-இல் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டு, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை, தனித்தமிழீழக் கோரிக்கையை, ஆயுதப் போராட்டத்தை கைவிட்டு, மாகாண சுயாட்சி தீர்வுக்கு கீழ் இறங்கின. நாடாளுமன்ற தமிழ் தரகுக் கட்சிகள் மட்டுமல்ல. தமிழீழம் கேட்டு ஆயுதப் போராட்டம் நடத்திய இயக்கங்களும் இதில் சேர்ந்து கொண்டன; சிறீலங்கா நாடாளுமன்றத்துக்கு செல்வதன் மூலம், மாகாண சபை அதிகாரத்தை பெறுவதன் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்க்க முடியும் என்று கூறி, மீண்டும் தமிழ் மக்களை ஏமாற்றின. நாடாளுமன்றப் பாதையில் நின்று வந்த தமிழ்த் தரகுக் கட்சிகள் தேர்தல்கள் மூலம் தமிழ்த் தேசிய வெறியுணர்வு ஊட்டி மட்டும் மக்களை ஏமாற்றி துரோகம் இழைத்தன. ஆனால் இந்த ஆயுதப் போராட்ட இயக்கங்கள் தமிழ் மக்களின் இரத்தத்தை சிந்த வைத்து தேசிய வெறியுணர்வு ஊட்டி, அகதிகளாக்கி தமிழ் மக்களுக்கு துரோகம் இழைத்தன. குறைந்தபட்சம், திம்புக் கோரிக்கைகளை கூட கைவிட்டு, தமிழ் தரகுக் கட்சிகளாக, இயக்கங்களாக மாறின. சிறீலங்கா நாடாளுமன்றத்தின் பன்றிகளாக மாறின. தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் எதிரிகளாக இருந்த, இந்திய ஆக்கிரமிப்பு அரசுடன், சிறீலங்கா அரசுடன் அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும், ராஜதந்திர ரீதியிலும் கூடிச் செயற்பட்டன. ஆயுதம் ஏந்தாத / ஆயுதம் ஏந்திய தமிழ்த் தரகு கட்சிகள் எல்லாம் இதைச் செய்தன.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டும் தொடர்ந்து தான், தமிழ் மக்களுக்கு உறுதி மொழி செய்த கொள்கைகளுக்காக போராடி வருகின்றது. தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்திற்கான போரை தொடர்ந்து நடத்தி வருகின்றது.

தமிழ் இன ஒடுக்குமுறை அரசியலை மட்டுமல்ல. இன அழிப்பு யுத்தத்தையும் தலைமை தாங்கி நடத்தி வந்த UNP கட்சி, 1994 நாடாளுமன்ற தேர்தலில் தோற்கடிக்கப்பட்டது. தமிழ் இன அழிப்பு யுத்தத்தை நடத்தும் பொறுப்பை SLFP முதன்முறையாக ஏற்றுக் கொண்டது. கடந்த காலங்களைப் போன்று தனிப் பெரும்பான்மையுள்ள தனிக் கட்சியாக ஆட்சி அமைக்க முடியவில்லை.

மக்கள் முன்னணி (PA) என தமிழ்த் தரகுக் கட்சி துரோகிகளையும் தன்னுடன் சேர்த்துக் கொண்டுதான், சந்திரிகா ஆட்சி அமைத்தார். இன ஒடுக்குமுறை யுத்தத்தை தமிழ்த் தரகு கட்சிகளின் அரசியல் - இராணுவ ஒத்துழைப்புடன் தொடர்ந்து நடத்தி வந்தார். எந்தத் தமிழ்தரகுக் கட்சி / இயக்கம், அரசுக்கு எந்த அரங்கில் கூடுதலாக ஒத்துழைத்தது என்பதல்ல

www.tamilarangam.net



பிரச்சினை, தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை - போரை - புலிகளை நசுக்கி அழிக்க எல்லாக் கட்சிகளும், இனவாத அரசுக்கு நாடாளுமன்றத்திலும், அதற்கு வெளியிலும் ஒத்துழைத்தார்கள். தமிழ் மக்களை ஒடுக்க சிறீலங்கா அரசு எடுத்த எந்த ஒரு அரசியல் - இராணுவ திட்டங்களையும், அரசின் பேச்சு வார்த்தை சூழ்ச்சிகளையும் எதிர்த்து, எந்தத் தமிழ்த் தரகுக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பதவியை துறந்ததில்லை என்பதுதானே வரலாறு.

இனிவரும் காலங்களில் எந்த சிங்கள இன, மதவாதக் கட்சியாலும் தனிப் பெரும்பான்மையுடன் நாடாளுமன்ற அதிகாரத்தை கைப்பற்றி ஆட்சி நடத்த முடியாது என்பது தெளிவாகி விட்டது. எப்படி SLFP கூட்டணி ஆட்சி நடத்தியதோ அதுபோல் UNPயும், கூட்டணி ஆட்சியைக் கைப்பற்றித்தான் நடத்த முடியும் என்பது உறுதியாகிவிட்டது. கூட்டணி ஆட்சிகளிலும் தொங்கு நாடாளுமன்றங்களிலும், சுயேட்சைகளுக்கும், சிறுபான்மை / சிறிய கட்சிகளுக்கும் பேரம் பேசும் சக்தி அதிகரித்திருக்கிறது இது இலங்கையில் மட்டுமல்ல, பல புதுக் கொலனிய நாடுகளிலும் இதுதான் நிலைமை.

எல்லாத் தமிழ்த் தரகு முதலாளித்துவ கட்சிகளும் (ஆயுதம் உள்ள / ஆயுதம் இல்லாத) உட்கட்சி நெருக்கடிகளில் சிக்கியுள்ளன. ஒவ்வொரு கட்சியும் தனித்தனியாக தேர்தலில் நிற்பதால், வாக்குகள் பிரிபடுவதால் தேர்தல் வெற்றி என்பது அதிர்ஷ்ட குலுக்கலாகி விடுகிறது. தமிழர் பகுதிகளில் சிங்கள இனவாத கட்சிகளின் தமிழ் வேட்பாளர்கள் வெல்வது கூட சாத்தியம் என்ற நிலைமை உள்ளது. தேர்தலுக்கு முன்பாகவே ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றக் கூடிய SLFP, அல்லது UNP யுடன் கூட்டணி அமைத்துக் கொள்ளும் தமிழ்க் கட்சி, தேர்தலில் மக்களின் ஆதரவை உடனடியாக திரட்டிக் கொள்ளும் "தேர்தல் சூழ்ச்சியில்" நிதி / மற்றும் அதிகார பலத்தை முன்கூட்டியே பெற்றுக் கொள்வதால், தேர்தலின் பின் கூட்டணி பற்றி தீர்மானிக்கும் கட்சிகள் பலவீனமாகி விடுகின்றன. சிறீலங்கா அரசும், ஆளும் கட்சியும் இன ஒடுக்குமுறை யுத்தத்தையும் நடத்திக் கொண்டிருப்பதால் இன ஒடுக்குமுறை யுத்தத்துக்கு அதிகளவான பங்கு வழங்கக்கூடிய தமிழ்த் தரகுக் கட்சியை / இயக்கத்தைத்தான் ஆளும் கட்சியும் ,சிறீலங்கா அரசும் முன்னுரிமை கொடுத்து கவனிக்கும். UNP ஆட்சியிலும் சரி, SLFPஇன் கூட்டணி ஆட்சியிலும் சரி EPDP செல்வாக்கு மிகுந்து காணப்படுவதன் இரகசியம். சிறீலங்கா நாடாளுமன்ற வரலாற்றில் ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் இராஜாங்க அமைச்சர் (பெருமையை) என்ற எலும்புத் துண்டை டக்ளஷ் தேவானந்தா பெற்றதன் இரகசியம் இதுதான்.

யுத்தம் ஒரு தீர்மானகரமான அம்சமாக இருக்கும்போது, யுத்தம், அரசியல் வெற்றி - தோல்விகளை தீர்மானித்துக் கொண்டிருக்கும் வேளையில், சிறீலங்கா அரசு ஒரு யுத்த நெருக்கடிக்குள் சிக்கி இருக்கும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போது, சிறீலங்கா அரசுக்கும் அதனை ஆளும் கட்சிக்கும், இராணுவ ரீதியாக யுத்தத்தில், ஒப்பீட்டளவில் அதிகளவான சேவை செய்யும் அரசியல் கட்சியை / இயக்கத்தை எதிரிகள் பயன்படுத்திக் கொள்கின்றனர். புலிகளிடம் இருந்து கைப்பற்றிய பிரதேசங்களில் / இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் சிறீலங்கா இராணுவமும், அரசும், ஆளும் கட்சிகளும் இந்த தமிழ்த் தரகுக் கட்சிகளை கொண்டே தமிழ் மக்களை ஏமாற்றி வருகின்றது. ஒடுக்குமுறை யுத்தத்தை தொடர்ந்து நடத்திவர முடிகிறது.

ஆயுதம் ஏந்தாத TULF, ACTC ஆகிய தமிழ்த் தரகுக் கட்சிகள், இன ஒடுக்குமுறை யுத்தத்தை நடத்த சிறீலங்கா அரசுக்கு அரசியல் ரீதியாக உதவின. TELO, EPRLF, PLOT, EPDP ஆகிய தமிழ்த் தரகுக் கட்சிகள் அரசியல் ரீதியிலும் - இராணுவ ரீதியிலும் உதவின. எந்தளவுக்கு அரசுக்கு விசுவாசமாக இருக்கிறார்கள், எந்தளவுக்கு சுயமான இராணுவ அரசியல் பலத்துடன் தமிழ்த் துரோகிகள் இருக்கிறார்கள் என்பதைப் பொறுத்து அக்கட்சிகளுக்கான அரசியல் - இராணுவ உதவிகளை செய்து வருகிறது சிறீலங்கா அரசு. 1987 முதல் இதில் EPDP தொடர்ந்து முதல் இடத்தை பெற்று வருகின்றது. 1987-இல் இந்திய ஆக்கிரமிப்பு படை வந்த போது, புலிகள் வன்னிக்கு பின்வாங்கிய வேளையில் இந்த எல்லா தமிழ்த் தரகுக் கட்சிகளும், புலிகள் அழிக்கப்பட்டு விடுவார்கள். தமிழீழ தேசியப் போராட்டம் திசை திரும்பிவிடும் எனக் கணித்து, இந்தியரசுடன் - சிறீலங்கா அரசுடன் சேர்ந்து நின்றன. வடக்கு கிழக்கு மாகாண சபைத் தேர்தல்களில், சிறீலங்காத் தேர்தல்களில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை நிறைவேற்ற முயன்றன. ஆக்கிரமிப்பு யுத்தத்திற்கு ஆதரவான தமிழ்த் தரகர்களாக செயல்பட்டன. இக்கட்சிகளின் கணக்கு பொய்த்து விட்டது.

இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்த வெற்றியும், புலிகளின் வளர்ச்சியும், இவர்களை நிலைகுலையச் செய்தபோதும், யாழ்ப்பாணம் புலிகளின் கட்டுப்பாட்டில் 5 ஆண்டுகள் இருந்த நிலையில் கூட, இத்தரகுக் கட்சிகள், தமிழீழ தேசியத்தைப் பற்றிப் பேச, புலிகளை ஆதரிக்க முன்வரவில்லை. அந்தளவுக்கு இந்திய விசுவாசம் இவர்களை ஆட்டிப் படைத்தது, ஆட்கொண்டிருந்தது.

1995-இல் சிறீலங்கா இராணுவம் யாழ்ப்பாணத்தை கைப்பற்றிய போது புலிகள் மீண்டும் வன்னிக்கு பின்வாங்கினர். இந்தத் தமிழ்த் தரகுக் கட்சிகள், இனியும் புலிகளால், தமிழீழ தேசிய இயக்கத்தால முன்னெழுந்து வரமுடியாது என நினைத்து, சிறீலங்கா அரசுடன் சந்திரிகா அம்மையாரின் ஆட்சியில் நேரடியாகப் பங்கு வகித்து, புலிகளை அழிக்கும், தமிழீழ தேசியத்தை ஒடுக்கும் சிறீலங்கா அரசின் திட்டங்களுக்கு அரசியல் - இராணுவ ரீதியில் ஆதரவளித்தனர், பங்கெடுத்தனர்.

www.tamilarangam.net



மீண்டும் புலிகளின் வளர்ச்சியும், வன்னிக் கட்டுப்பாட்டுப் பகுதி நீட்டிப்பும் முக்கியமாக **'ஓயாத அலை'** வெற்றியும், அதன்பின்பான சர்வ தேசமாற்றங்களும், புலிகளுக்கும் - சந்திரிகா அரசுக்கும் இடையிலான, நோர்வே அரசின் பேச்சு வார்த்தை நிகழ்ச்சிகளும், இந்தியரசின் அணுகு முறைகளையும், இந்த தமிழ்த் தரகுக் கட்சிகளும் கவனித்தன. இதனுடன் தேர்தல் மூலம் அதிகாரத்தை கைப்பற்றுவதில் இக்கட்சிகள் சந்தித்து வரும் மேற்சொன்ன நெருக்கடிகளையும் எதிர் கொண்டுள்ள தமிழ்தரகுக் கட்சிகள், புலிகள் யுத்தத்தில் கை ஓங்கியுள்ள நிலை, சர்வதேச அபிப்பி ராயத்தில் அணுகுமுறையில் புலிகள் நேரடியாக கவனிக்கப்படுகின்ற காரணத்தால், புலிகளை ஆதரிப்பதன்மூலம் **தமிழீழ தேசியத்தை அல்ல,** தமிழ்த் தேசியத்தை தாங்களும் முன்னெடுப்பதாக ஒரு அரசியல் நிலைப் பாட்டை எடுப்பதன்மூலம், தங்களின் முந்தைய ஆதரவுச் சக்தியுடன், புலிகளை, தமிழீழ தேசியத்தை ஆதரிக்கும் மக்கள் சக்தியையும் புதிதாக உள்வாங்கிக் கொள்வதன் மூலம், சிறீலங்காவின் நாடாளுமன்ற நாற்கா லிகளைக் கைப்பற்ற முடிவு செய்துள்ளனர். இதற்கு **'தேர்தல் கால தேசியக் கொள்கையை'** கண்டுபிடித்துள்ளனர். தமிழ்தரகுக் கட்சிகளில் உடன்பட்ட கட்சிகள் சேர்ந்து **'தமிழ்த் தேசிய ஒற்றுமைக் கூட்டணியை'** (TNA) உருவாக்கியுள்ளன. 1977-இல் வட்டுக் கோட்டைத் தீர்மானப்படி தமிழீழக் கோரிக்கையை முன்வைத்து, தமிழ்ப் பகுதிகளில் அமோக வெற்றி ஈட்டிய TULF இன் **'உதய சூரியன்'** சின்னத்திலேயே இக்கூட்ட ணியில் உள்ள எல்லாத் தமிழ்த் தரகு கட்சிகளின் வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர். தமிழ்த் தரகு முதலாளித்துவ வர்க்கத்தின் பாரம் பரியக் கட்சியான TULF-ஐ மற்றைய புதிய தரகுத் தமிழ் கட்சிகள் தங்களின் கூட்டணித் தலைமைக் கட்சியாக ஏற்றுக் கொண்டிருப்பதில் வியப்பதற்கு ஒன்றுமில்லை. 1977-இல் ஆயுதப் போராட்ட இயக்கங் களின் வளர்ச்சியை தமிழீழக் கோரிக்கையை திசைதிருப்ப, **தமிழீழ தேசியக் கோரிக்கையை முன்னிறுத்தி தேர்தல் வெற்றி கண்ட** தமிழ்த் தரகு முதலாளிய அரசியல் கட்சிகள் இன்று புலிகளின் வளர்ச்சியை, தமி ழீழப் போராட்ட வளர்ச்சியை திசைதிருப்பி, தமிழ்த் தரகு முதலாளிய சக்திகளின் கையில் அதிகாரத்தை பங்கிட்டு எடுத்துக் கொள்ள 2001-இல் **தமிழ்த் தேசிய ஒற்றுமைக் கூட்டணியை (TNA)** நிறுவி, சிறீலங்காப் நாடாளுமன்றத்துக்கு செல்வதற்கான தேர்தலில் இறங்கியுள்ளன.

இந்தத் **தமிழ்த் தேசிய ஒற்றுமைக் கூட்டணி (TNA)** தமிழீழ தேசி யத்தை முன்னிறுத்தும் தேசிய அரசியல் பொருளாதாரக் கொள்கைகளை முன்னிறுத்தவில்லை. புலிகள் இயக்கத்தின் தேசிய அரசியல் கோரிக்கை களைக் கூட முன்னிறுத்தவில்லை. பேச்சு வார்த்தைக்காக புலிகள், சிறீ லங்கா அரசுக்கு முன் வைத்த கோரிக்கைகள் தான் இவர்களால் வைக்கப் படுகிறது.

www.tamilarangam.net



- புலிகள் மீதான தடை நீக்கம்

- புலிகளின் கட்டுப்பாட்டு பகுதி மீதான பொருளாதாரத் தடை நீக்கம்

- மூன்றாவது நாட்டின் முன்னிலையில் பேச்சு வார்த்தை இடம் பெற வேண்டும்.

- இத்துடன் புலிகளை தமிழீழ மக்களின் ஏகப் பிரதிநிதியாக அங்கீகரித்து அவர்களுடன் மட்டும் பேசவேண்டும் இதைத்தான் தமிழ் தேசிய ஒற்றுமைக் கூட்டணி தனது கொள்கையாக கொண்டுள்ளது. இதனால்தான் புலிகளின் முன்னணி அமைப்பு, இக்கூட்டணி எனப் பலரும் பார்க்கின்றனர்.

தமிழ் தேசியத்தை பயன்படுத்தி, புலிகளின் கோரிக்கைகளை பயன் படுத்தி தமிழ்த் தரகு முதலாளித்துவ கட்சிகளின் கூட்டணி, 1977 போல் மீண்டும் தேர்தலில் வெற்றி வாகை சூடி நாடாளுமன்ற அதிகாரத்தை கைப்பற்ற முயல்கிறது.

புலிகளை பேச்சுவார்த்தை என்ற ஒரு நாடகத்தில் சிக்க வைக்கவும், தனித்தமிழீழம் என்ற இலட்சியப் போராட்டத்தில் இருந்து புலிகளை திசை திருப்பி விடவும், இலங்கையின் அரசு அமைப்புக்குள் ஒரு உயர்ந்தபட்ச தீர்வுத் திட்டத்தை உருவாக்கவும் முயன்று கொண்டிருக்கின்ற மூன்றாம் தரப்பு உலக நாடுகளின் அரசியல் இராஜதந்திரச் சூழ்ச்சிகளை நிறைவேற்றுவதற்கான ஒரு அரசியல் தயாரிப்பாகவும் 'தமிழ் தேசிய ஒற்றுமைக் கூட்டணி' (TNA) செயல்படத் தொடங்கியுள்ளது. புலிகள் இயக்கத்தை தமிழீழ ஆயுதப் போராட்டத்தின் ஏகப்பிரதிநிதியாகவும், தங்களது கூட்டணியை தமிழ் மக்களின் நாடாளுமன்ற ஏகப்பிரதியாகவும் ஏற்கும்படியான அரசியல் பிரச்சாரத்தை இந்த தமிழ்த் தரகுக் கட்சிகள் செய்து வருகின்றன; புலிகளை, அவர்களின் ஆயுதப் போராட்டத்தை சமரசப்படுத்திவிட்டால், பின்னர் தீர்வு சிறீலங்கா நாடாளுமன்றத்தில் என்றாலும் சரி, தமிழீழ நாடாளுமன்றத்தில் என்றாலும் சரி இந்த தமிழ் தரகுக் கட்சிகளும் தான் அதிகாரத்தின் ஏகப்பிரதிநிதிகள். தமிழீழத் தரகு முதலாளித்துவ வர்க்கம்தான் ஆளும் வர்க்கம். இதில் ஆயுதம் ஏந்தாத / ஆயுதம் ஏந்திய தமிழ்த்தரகு அரசியல் - இராணுவச் சக்திகள் தெளிவாக இருக்கிறார்கள்.

அதனால்தான் உயர்ந்தபட்சமாக "கிழக்கு தீமோர், கொசவோ" மாதிரியான தமிழீழத்தையாவது அங்கீகரிக்குமாறு உலக நாடுகளை, அய்க்கிய நாடுகள் சபையை (UN) கோருகின்றனர். சர்வதேச அரசியல் நிறுவனங்களில் (IPI)இல் பணிபுரியும் சிங்கள அறிவுஜீவிகள் கூட, இலங்கையில் இரண்டு தனித்தனியான அரசுகள் உருவாவதால் பிரச்சினை இல்லை, சிங்கள மக்கள் மத்தியில் உருவாக்கப்பட்டுள்ள , தமிழ் அரசு பற்றிய பயங்களை (மத வழிபாடு, நில ஆக்கிரமிப்பு, பொருளாதாரம், எல்லை

www.tamilarangam.net



யுத்தம்...) பற்றி சிங்கள மக்கள் அச்சம் கொள்ள வேண்டியதில்லை என்கின்றனர். நெதர்லாந்தில் இருந்து பெல்ஜியம் பிரிந்தது முதல் எதியோப்பியாவில் இருந்து எரித்திரியா பிரிந்ததுவரை உதாரணம் சொல்லி வருகின்றனர். அய்நா சபை ஏற்பாட்டில், கண்காணிப்பில் இரு அரசுகள் உருவாகலாம் என்கின்றனர். சிறீலங்காவின் இன்றைய 7 மாகாணங்களை உள்ளடக்கிய **சிறீலங்கா அரசு** உலகில் 61 நாடுகளை விடப் பெரியது. அய்ரோப்பாவில் உள்ள 18 நாடுகளை விடப் பெரியது என நம்பிக்கை ஊட்டுகின்றனர். இரண்டு மாகாணங்களை உள்ளடக்கிய **தமிழீழ அரசு** உலகில் 16 நாடுகளை விடப் பெரியது என்கின்றனர். உலக வல்லரசுகளின், பல்தேசியக் கொம்பனிகளின் சுரண்டலுக்கும், ஆதிக்கத்துக்கும் அனுமதியளிக்கின்ற ஒரு **புதிய கொலனியத் தமிழீழத்தை** தான் உயர்ந்த பட்சமாக இந்தத் தரகு முதலாளித்துவ சக்திகளால் உருவாக்க முடியும், என்பதை வரலாறு மீண்டும் நிரூபிக்கும்.

சிறீலங்கா அரசு, நாடாளுமன்றப் பாதையை (நிலவும் அரசியல் சாசனத்தை) ஏற்றுக் கொண்டு வருகின்ற தமிழ்க் கட்சிகள், ஆயுதம் இருந்தாலும் இல்லாவிட்டாலும், அவற்றை தனக்கு சார்பாக பயன்படுத்திக் கொள்வதில் தெளிவாக - தயாராக இருக்கிறது. **தமிழ் தேசிய ஒற்றுமைக் கூட்டணியின் "கொள்கை வகுப்பாளர்களால்"** அப்படி அணுக முடியவில்லை. இன்னொரு தரகுக் கட்சியான PLOT இக்கூட்டணியில் சேர விரும்பியபோதும், அவர்கள் ஆயுதங்கள் இல்லாமல் இருக்க வேண்டும் என கூட்டணி கோருகிறது. PLOT தற்காப்புக்கான ஆயுதங்கள் மட்டுமே தங்களிடம் உள்ளது தாங்களும் முன்னர் உங்களைப் போல் (TELO, EPRLF) (சுரேஷ்) அரசுடன் கூடிச் செயற்பட்டோம். இப்போது அப்படியில்லை உங்களைப் போல் என்கிறது. தேர்தலின் பின்பு கூட இந்த "தமிழ் தேசிய ஒற்றுமைக் கூட்டணியில்" சேரத் தயார் என்கின்றது. PLOT தலைமை, தேர்தலின் பின் இக்கூட்டணி எப்படி இருக்கும் என்பதை இப்போதே கிழக்குத் தமிழீழத்தில் கூட்டணிக்குள் நடக்கும் இன்றைய சூழ்ச்சிகள், மோதல்கள், பேரங்கள் எதிர்காலத்தை தெளிவாகக் காட்டுகின்றது. **தேர்தல் கால தேசிய ஒற்றுமைக் கூட்டணியின், வேசம் கலையும் காலம் வெகுதூரத்தில் இல்லை.**

தமிழ்த் தரகு முதலாளித்துவ கட்சிகள் இரண்டாக பிளவு பட்டு நிற்கின்றன. புலிகளின் வெற்றியை, தமிழீழ தேசியப் போராட்டத்தின் வளர்ச்சியைப் பார்த்து அதைப் பயன்படுத்தி, தமிழ் தேசியத்தை பேசி சிறீலங்கா நாடாளுமன்றத்தில் கூடுதலான நாற்காலிகளை கைப்பற்ற **முயலும் பிரிவு**. இவர்கள் தேசியப் போராட்டத்தின் ஆதரவாளர்களாக காட்டிக் கொண்டே, தரகு முதலாளி வர்க்கத்தின் ஆட்சி அதிகாரத்தை தேசியப் போராட்டத்திலும் நிறுவ முயல்பவர்கள். TULF, TELO, ACTC, EPRLF (சுரேஷ்) என்பன **மற்றையது** EPDP, EPRLF (வரதர்) போன்றன. சிறீலங்கா அரசின் பக்கம் முழுமையாக நின்று, தேசியப் போராட்டத்தை

www.tamilarangam.net



எல்லா நிலைகளிலும் ஒடுக்க அரசுக்கு உதவுபவர்கள், அரசில் அங்கம் வகிப்பதன் மூலம் தங்கள் பகுதிகளில் நேரடியாக தரகு முதலாளி வளர்க்க ஆட்சியை நடத்தி வருபவர்கள், சிறீலங்கா அரசுக்கு இராணுவ ரீதியிலும் உதவுபவர்கள், ஒன்று கூடி நிற்பவர்கள் இவர்கள் மட்டும்தான் தமிழ் தரகு முதலாளித்துவ சக்திகள் என்ற ஒருமாயை நிலவுகின்றது. தேசியப் போராட்டத்தை பயன்படுத்தி தரகு முதலாளிய தலைமை அதிகாரத்தை நிறுவிவரும் மற்றைய தரகு சக்திகள் இப்படியான பிரச்சாரத்தை முடுக்கி விட்டுள்ளன. தங்களின் உண்மை முகத்தை திட்டமிட்டு, தமிழீழ மக்களின் முன் மறைப்பதற்கான உத்தி இது. அண்மையில் அரசமைப்பு கவுன்சிலுக்கான தமிழ்ப் பிரதிநிதிகள் நியமிப்பில் இக்கூட்டணிக் கட்சிகள் எப்படி மோதிக் கொண்டார்கள். தமிழ்நாட்டு அகதி முகாம்களில் கோயில் கட்ட நிதி வழங்கியுள்ளனர். முகாமில் உள்ள 'முன்னாள் போராளிகளை' கூட்டி வந்து, அரசுக்கு ஆள் வழங்கி வியாபாரம் செய்தனர். ஒட்டு மொத்த தமிழ் தரகுக் கட்சிகளில், பல கட்சிகள் பிழைப்புவாத கட்சிகளாகவே இருக்கின்றன. இவர்கள் எப்போது? எந்தப் பக்கம் தாவுவார்கள் என்பது அவர்களின் பிழைப்புக்கான எதிர்கால நோக்கம், மற்றும் அதிகார போதை சார்ந்தது. இதை புலிகளும் கவனத்தில் கொண்டிருப்பதாக தெரிகிறது.

**புலிகளின் தலைமை** ஓயாத அலைவெற்றிக்கு பின், உள்நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் தமிழீழ தேசியத்தை ஆதரித்து, புலிகளின் போராட்டத்தை ஆதரித்து பிரச்சாரம் செய்யும் அரசியல் சக்திகளை உருவாக்கி வருகிறது. அவ்வாறு செய்பவர்களுக்கு அனுமதியளிக்கிறது. புலிகளின் இராணுவ வெற்றிகளுடன், தமிழீழ மக்கள் மத்தியிலுள்ள அரசியல் சக்திகள் கூட தமிழீழ தேசியப் போராட்டத்தை - புலிகளை ஆதரிக்கும்போதுதான் சிறீலங்கா அரசை, உலக நாடுகளை புலிகளால் உலக நிறுவனங்களை மேலும் நிர்ப்பந்திக்க முடியும். புலிகளின் கோரிக்கை வெறுமனே, புலிகள் என்கின்ற ஒரு இராணுவ இயக்கத்தின் கோரிக்கை அல்ல. தமிழீழ மக்கள் மத்தியிலுள்ள பெரும்பாலான அரசியல் சக்திகளின் கோரிக்கையும் என்பதை உலகம் அங்கீகரிக்க முன்வரும் அல்லவா?

இதனால் புலிகள் இயக்கம், பல்கலைக்கழ மாணவர்களின் "**பொங்கு தமிழ் எழுச்சியில்**" தொடங்கி இவ் அணுகுமுறையை பலப்படுத்தி வருகின்றனர். இதற்கு தமிழ் தரகுக் கட்சிகள் முதல் தமிழீழ புரட்சிகர கட்சிகள் வரை யார் தயாராக இருந்தாலும், "**தமிழ்த் தேசிய எழுச்சி அரசி**யலை பிரச்சாரப்படுத்த அனுமதிக்கின்றனர். **புலிகளின் இராணுவ** வெற்றிகளை, அரசியலை பிரச்சாரப்படுத்த அனுமதிக்கின்றனர். புலிகளின் இராணுவ வெற்றிகளை, புலிகள் அரசுகளை நோக்கி முன்வைக்கும் கோரிக்கைகளை விரிவாகப் பிரச்சாரப்படுத்துவதே தமிழ் தேசிய எழுச்சியாகவுள்ளது. ஆனால், **சுதந்திரமாக, தமிழீழ தேசியப் போராட்டத்தை முன்னெடுக்கும் அரசியல் - இராணுவ இயக்கத்தை புலிகள் அங்கீகரிக்கவில்லை. அனுமதிக்கவில்லை.**

www.tamilarangam.net



(TNA) 'தமிழ் தேசிய ஒற்றுமைக் கூட்டணியில்' உள்ள தமிழ்த் தரகு கட்சிகளின் இந்த மாற்றமானது, இக்கட்சிகள், தமிழீழ தேசியப் போராட்டத்தின், தேசிய முதலாளித்துவத்தின் பக்கம் வந்துவிட்டதாக கணிப்படுவது மிகவும் தவறானது என்பதை கவனிக்க வேண்டும். இக்கட்சிகள் குறைந்தபட்சம், மல்லாகம் தீர்மானத்தை, வட்டுக் கோட்டைத் தீர்மானத்தினை, ''திம்புக் கோரிக்கைகளைக் கூட'' மீண்டும் தங்களின் கொள்கைகளாக வெளிப்படையாக முன்னிறுத்தவில்லை என்பது தெளிவு. ஒரு வேளை இக்கோரிக்கைகளை மீண்டும் முன் வைத்தால் கூட இக்கட்சிகள் ஒருக்காலும் தேசிய முதலாளித்துவ கட்சிகளாகி விட முடியாது. தேசிய விடுதலை யுத்தம் தீர்மானகரமான கட்டத்தில் இருக்கும்போது, தேசிய அரசியல் கோரிக்கைகளை முன்னிறுத்தி, தேசியப் போராட்டத்தில் நேரடியாக சிறீலங்கா அரசை, அதை தாங்கி நிற்கும் உலக வல்லரசை எதிர்த்துப் போராடாது, சிறீலங்காப் பாராளுமன்றத்தில் பங்கு வகித்துக் கொண்டிருக்கின்ற எந்தக் கட்சியும், தேசியப் போராட்டசக்தியாக, தேசிய முதலாளித்துவ சக்தியாக இருக்க முடியாது. தமிழீழ தேசியப் போராட்டத்தில் சிறீலங்கா அரசை எதிர்த்து மட்டுமல்ல அடிப்படையில் உலக வல்லரசுகளை எதிர்த்தும் போராட, அரசியல் இராணுவ இயக்கங்கள் / கட்சிகள் தேசிய விடுதலை இலட்சியத்தை இறுதி வெற்றிவரை முன்னெடுக்க முடியாது என்பதுதான் உண்மை. ஊசலாடுகின்ற தேசிய முதலாளித்துவ சக்திகளை அவற்றின் போராட்ட நடைமுறையில் தான் கண்டுபிடிக்க முடியும். தேசிய விடுதலை போராட்டத்தில் உறுதியாக நிற்கின்ற, போராடுகின்ற தேசிய முதலாளித்துவ கட்சிகளுடன் தான், புரட்சிகர தேசிய விடுதலை அமைப்பு, மேல் இருந்து அய்க்கிய முன்னணி கட்டிப் போராட முடியும். கீழ் இருந்து கட்டப்படுகின்ற புரட்சிகர அய்க்கிய முன்னணிக்குள் தேசிய முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ சக்திகள் அணிதிரட்டப்படுவதுகூட புரட்சிகர தேசிய விடுதலைக்கான அரசியல் இராணுவ திட்டத்தின் அடிப்படையில்தான். இவ் மூலோபாய ரீதியான அய்க்கிய முன்னணிக் கொள்கையை கைவிட்டு விட முடியாது.

இந்த அடிப்படை நிலைப்பாட்டை நிராகரிக்கும் வகையில் சில முற்போக்கு சக்திகள் தங்களின் நிலைப்பாட்டை முன்வைத்து செயற்படுகின்றன. (TNA) 'தமிழ் தேசிய ஒற்றுமைக் கூட்டணி'யைப் பார்த்து ஒன்று அக்கட்சிகள் தேசியப் போராட்டத்தை முன்னெடுப்பதாக கருதுகின்ற தவறைச் செய்கிறார்கள். இரண்டு தரகு முதலாளித்துவ கட்சிகளும், சக்திகளும் கூட தேசியப் போராட்டத்தை முன்னெடுக்க முடியும், தரகு முதலாளித்துவ வர்க்கத்தையும், புரட்சிகர தேசிய விடுதலை அமைப்பு, மூலோபாய ரீதியாக அய்க்கிய முன்னணிக்குரிய வர்க்கமாக கணிப்பிட வேண்டும் என நவீன கோட்பாட்டையும் அரசியலையும் முன் வைக்கிறார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



*சிறீலங்காவின் மூலதனத்துடன் அய்க்கியப்படாமல், உலக அன்னிய மூலதனங்களுடன் அய்க்கியப்பட்டிருக்கக்கூடிய தமிழீழத் தரகு முதலாளி வர்க்கமும், அதன் அரசியல் - இராணுவப் பிரதிநிதிக் கட்சிகள் / இயக்கங்கள் ''தேசியம்'' பேசுவதால் தமிமீழ தேசிய சக்தியாகி விட முடியுமா? சிந்தியுங்கள்.*

சிறீலங்காவின் மூலதனங்களுடன் - அன்னிய உலக மூலதனங்களுடன் அய்க்கியப்பட்டிருக்கின்ற தமிழ்த்தரகு முதலாளி வர்க்கமும், அதன் அரசியல் - இராணுவ பிராதிநிதிக் கட்சிகள் மட்டும்தான் தமிதேசியத்துக்கு எதிரான தரகுக் கட்சிகளா? தமிழ்த் தரகு முதலாளித்துவ கட்சிகள் '**தமிழ்த் தேசியத்தை**' பேசுவதன் நோக்கம் **ஒன்று** அன்னிய அரசுகளுடன், மூலதனங்களுடன் பேரம் பேசுவதற்கும் நாட்டை மேலும் மேலும் புதுக்கொலனிய முறைக்குள் மூழ்கச் செய்வதற்கும், **இரண்டு** தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை திசை திருப்பி அழிப்பதற்கும் தான்.

சமகால தமிழீழ சமூக அமைப்பில் பொருளாதாரம் அரசியல் என ஆதிக்கம் செலுத்தும், அதிகாரத்தில் இருக்கின்ற தமிழீழ முதலாளி வர்க்கம். தமிழீழ தேசியப் போராட்டத்தை கையில் எடுத்திருப்பது தனது தலைமையை நிறுவி, சிறீலங்காவின் தேசிய ஒடுக்குமுறைக்கு முடிவு கட்டி விட்டு (?) தொடர்ந்தும் முதலாளிவர்க்க அரசை தனியாக நிறுவி தொழிலாளி வர்க்கத்தையும், ஏனைய உழைக்கும் மக்களையும் சுரண்டி, பொருளாதார சமூக ரீதியில் அடக்கி ஒடுக்குவதற்காக உலக முதலாளித்துவத்துடன் ஒன்றுபடுவதற்காக.

தமிழீழ தொழிலாளிவர்க்கமும் உழைக்கும் மக்களும் தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடுவது. தமது தலைமையை நிறுவி, அதிகாரத்தை கைப்பற்றுவது, தேசிய ஒடுக்குமுறைக்கும் - வர்க்க ஒடுக்குமுறைக்கும் வரலாற்று ரீதியாக முடிவு கட்டி, உழைக்கும் மக்களின் சுதந்திரமான தேசிய அரசை நிறுவுவதற்காக, உலக தொழிலாளி வர்க்கத்துடன் ஒன்றுபடுவதற்காக.

*தேசிய விடுதலைப் போராட்டத்தில் இரண்டு, எதிர் எதிர் வர்க்கங்களும் ஈடுபடுகின்றன. தத்தமது வர்க்க நலன்களை கைவிட்டு விட்டு ''பொதுவான தேசிய நலன்'' என்ற ஒன்றுக்காக உணர்வடைந்த வர்க்க அரசியல் சக்திகள் என்றும் போராடுவதில்லை, முதலாளிவர்க்கம் தேசிய விடுதலைப் புரட்சியில் ஈடுபடுவது, அதிகாரத்தை கைப்பற்றுவது வர்க்கப் புரட்சி அல்ல. தொழிலாளிவர்க்கம் தேசியப் போராட்டத்தில் ஈடுபட்டு அதிகாரத்தை கைப்பற்றும் போது மட்டும்தான் அது வர்க்கப் புரட்சியாக மாறுகின்றது. தேசியப் போராட்டத்தில் வர்க்கப் போராட்டம் வர்க்க யுத்தம் சமகாலத்தில் (சகோதர யுத்தமல்ல) இப்படித்தான் நடக்கிறது. ''தேசிய விடுதலைப் போராட்டமும் அடிப்படையில் வர்க்கப்*

www.tamilarangam.net



போராட்டம்'' என தொழிலாளி வர்க்கம் வரையறுக்கிறது. இந்தக் கண்ணோட்டத்தில்தான்.

தமிழீழ தேசிய விடுதலைக்காக போராடுகின்ற சக்திகள், இன்றைய தேசிய, சர்வதேசிய அரசியல் - இராணுவ இராஜ தந்திர நிலைமைகளை ஆழ்ந்து கவனிக்க வேண்டியுள்ளது. உள்நாட்டு அரசுக்கு எதிரான, உள்நாட்டு அரசைக் காப்பாற்றிவரும் அன்னிய அரசுகளுக்கும் - உலக வல்லரசுகளுக்கும் எதிரான ஆயுதப் போராட்டத்தை ''பயங்கரவாதப் போராக'' சித்தரித்து அடக்கி ஒடுக்கி அழிக்க எதிரிகள் உலகளவில் கூட்டுச் சேர்ந்து வருகிறார்கள்.

தமிழீழ மக்களின் தேசிய சுதந்திரத்தை; தாயக விடுதலையை, சிறீலங்கா அரசும், எந்த ஆளும் கட்சியும் பேச்சு வார்த்தை மூலம் தந்து விடாது. உலக வல்லரசுகள் கொலனிய இலங்கையை, நவகொலனியாக மாற்றிவிட்டு கொடுத்த 'தேசிய சுதந்திரத்தை' (? 1948 பெப். 4-இல்) போன்ற தமிழீழ சுதந்திரத்தை பெறுவதற்கு தமிழீழ மக்களும் - போராளிகளும் - **புலிகளும் தயார் இல்லை**. சிறீலங்கா அரசை முற்று முழுதாக தூக்கி எறிவதன் மூலமே தமிழீழம் விடுதலை அடையும், மக்கள் உண்மையான சமூக பொருளாதார அரசியல் சுதந்திரத்தை தொடர்ந்து அனுபவிக்க முடியும்.

புலிகள் இயக்கம் 'ஓயாத அலை' வெற்றியை தொடர்ந்து பேணுகின்றது. கிழக்கு தமிழீழத்தில் புதிய சிறிய கட்டுப்பாட்டுப் பகுதிகளை உருவாக்கியுள்ளது. யூலை 'விமான தளத்தாக்குதல்' உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது. சந்திரிகா அரசின் சமாதான முகமூடியை கிழித்துள்ளனர். இன ஒடுக்குமுறை யுத்தத்தை எதிர்த்து போரிடும் திறனை அதிகரித்துள்ளனர். செப்டம்பர் மாதத்தில் இருந்து பல கடற்சமர்களை எதிரிப் படைகள் மீது தொடுத்து வருகின்றனர். இரவில் மட்டுமல்ல பகலிலும் எதிரியுடன் கடலில் போரிடும் ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளனர். அரசு படைகளுடன் போரிட்டுக் கொண்டே ஆயுதங்களை தரையிறக்கி சேமித்து வருகின்றனர். கிழக்குத் தமிழீழத்தில் தொடர்ச்சியான தாக்குதல்களில் ஈடுபடுகின்றனர்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி இன்னமும் ஒரு **'விடுதலைப் பிரதேசமாக'** மாறவில்லை. அரசின் படைகள் அப்புறப்படுத்தப்பட்டிருப்பது உண்மை. ஆனால் ஏனைய சிவில் சமூக அமைப்புகள், அதிகார அமைப்புகள் எல்லாம் சிறீலங்கா அரசு உருவாக்கிய அதிகார வடிவங்களும், கட்டமைப்புகளும் அப்படியே பேணப்படுகின்றன. புலிகளின் நீதி நிர்வாகத் தீர்ப்புகள் நடைமுறைப்படுத்தப்படுகிறது. ஆனால் அரசின் சம்பளம் வாங்கிக் கொண்டு அதிகாரிகள் இயங்குகிறார்கள். சிவில் நிறுவனங்கள் இயங்குகின்றன. புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் ஒரு மாற்று **அரசியல் அதிகார அமைப்பு வடிவம்** உருவாக்கப்படவில்லை.

www.tamilarangam.net



புலிகள் இயக்கத்துக்கு ஒரு இராணுவ அதிகார அமைப்பு வடிவம் இருப்பதுபோல், கட்டுப்பாட்டு பகுதி மக்களின் மத்தியில் ஒரு அரசியல் அதிகார ஆட்சியமைப்பு முறை உருவாக்கப்படவில்லை. இது ஒரு விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சியில் ஏற்படும் மாறும் காலகட்டத்தின் வெளிப்பாடு, சிறீலங்கா அரசு தனது தமிழீழ கட்டுப்பாட்டுப் பகுதியில் கடைப்பிடித்துவரும். தேர்தல் மற்றும் நாடாளுமன்ற ஆட்சி முறையில் இருந்து புலிகளின் **சோசலிச (?) தமிழீழ அரசியல் அதிகார வடிவம், தேர்தல் முறை** எப்படி வேறுபட்டது, சிறந்தது என்பதை தமிழீழ மக்களால் இதுவரை பார்க்க முடியவில்லை. போராட்டம் இறுதி வெற்றியை நெருங்கிக் கொண்டிருப்பதாக பேசுபவர்களும் இதுபற்றி கவனத்தில் கொள்வதாக தெரியவில்லை இது ஒரு முக்கியமான ஒரு விடயம். எதிர்கால தமிழீழம் பற்றி புரிந்து கொள்ள இது உதவும்.

புலிகள் இயக்க தலைமை, தமிழ்த் தரகு முதலாளித்துவ புலி ஆதரவுக் கட்சிகளை சுதந்திரமாக செயற்படவிடுமளவுக்கு கூட, சிறீலங்கா பாராளுமன்றத்தில் அதிகாரத்தை கைப்பற்ற அக்கட்சிகள் மக்களிடம் செல்லுமளவுக்கு அனுமதிக்கின்றனர். ஆனால் புலிகளை ஆதரிக்கின்ற, தமிழீழ தேசியப் போராட்டம் குறித்து தேசிய விடுதலை அரசியலில் உறுதியாக நிற்கின்ற தமிழீழ புரட்சிகர தேசபக்த அமைப்புகள் மக்கள் மத்தியில் செயற்படுவதை இதுவரை அனுமதிக்கவில்லை.

உலக தேசிய விடுதலை இயக்கங்களில் பட்டியலில் இன்று முக்கியத்துவம் பெற்று விளங்கும் **தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்**, தேசிய விடுதலைக்காக போராடும் சக புரட்சிகர இயக்கங்களை / அமைப்புகளை இறுதிவரை புறக்கணித்த, தடைசெய்த ஒரு பிற்போக்குத் தேசிய விடுதலை இயக்கமாக வரலாற்றில் தன்னை மாற்றிக் கொள்ளக் கூடாது; அடல்பாலசிங்கம், புலிகள் இயக்கம், அதன் தலைவர் பிரபாகரன் பற்றியும் விரிவாக எழுதி ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள **"சுதந்திர வேட்கை"** என்ற நூலில் பிரபாகரனின் குணஇயல்புகள், போரியல் திறமைகள், இலட்சிய உறுதி பற்றி நிறையவே எழுதியுள்ளார், தவறுகளை துணிவுடன் திருத்திக் கொள்ளும் தேசியத் தலைவர் என்கிறார். பிரபாகரனும் புலிகள் இயக்கமும், தமிழீழ புரட்சிகர அமைப்புகள் பற்றி உலக புரட்சிகர இயக்கங்கள் குறித்து தமது கண்ணோட்டத்தை வெளிப்படையாக, முன் வைத்தால் அடல் எழுதியிருப்பது வரலாற்றில் அர்த்தம் உள்ளதாக வெளிப்படும்.

*சிறீலங்கா அரசை வேரோடும், வேரடி மண்ணோடும் அழித்து ஒழித்தால்தான், தமிழீழ சுதந்திர தாயகம் படைக்கப்படும். மாவீரர்களின் தாகம் தீர்க்கப்படும். உண்மையான தேசிய விடுதலையை தமிழீழ மண்ணும் - மக்களும் அனுபவிக்க முடியும். இதில் புலிகள் தெளிவாக உறுதியாக இருந்தால் சிறீலங்கா அரசை உலக வல்லரசுகளை உறுதியாக எதிர்த்து,*

www.tamilarangam.net



*தேசிய விடுதலையை முன்னிறுத்தும் தமிழீழ / சிறீலங்காவின் புரட்சிகர சக்திகளுடன் நல் உறவை ஏற்படுத்த வேண்டும்.*

உலக வல்லரசுகளின், பல்தேசியக் கொம்பனிகளின், சிறீலங்கா இனவாத அரசின் புதுக் கொலனிய ஒடுக்குமுறைக்கு எதிரான, சிறீலங்கா மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும். சிறீலங்காவின் புரட்சிகர இயக்கங்கள். புதிய சனநாயகப் பார்வையில், தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தையும் அங்கீகரிக்கிறார்கள். தமிழீழ / சிறீலங்கா மக்களின் பொது எதிரி ஒன்றாக இருப்பதால், எதிரிக்கு எதிராக கூட்டமைத்து போராட தயாராக இருக்கிறார்கள்; தனித் தமிழீழத்தை அங்கீகரிக்கிறார்கள்.

சிறீலங்கா அரசை எதிர்த்து 25 ஆண்டுகளாக போராடும் புலிகள் இயக்கம், புலிகளின் தேசிய விடுதலைப் போராட்ட அனுபவம், புலிகளின் மிக தேர்ச்சியான போரியல் வளங்கள், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி இவை அனைத்தும் இருந்தும் புலிகளின் தலைமை, தங்களின் நேரடி எதிரிக்கு எதிரான, சிறீலங்காவின் புரட்சிகர மக்கள் அமைப்புகளுடன் நல்உறவை ஏற்படுத்தி எதிரிகளை விரைவாக தோற்கடிக்க மறப்பது, மறுப்பது ஏன்? உலக நாடுகளின் புரட்சிகர இயக்கங்களுடன் உறவு வைத்துக் கொண்டால், அந்நாட்டு அரசுகளின் கோபத்தை எதிர்கொள்ள வேண்டி வரும் என்ற 'புலி இராஜதந்திரம்', சிறீலங்கா அரசு விடயத்தில் காட்ட வேண்டியதில்லை அல்லவா? சிறீலங்காவில் நுழைந்து மிகப் பெரிய தயாரிப்புகளுடன், இழப்புகளுடன் தற்கொலைத் தாக்குதல் செய்வதால் மட்டும் சிறீலங்கா அரசை அழித்தொழிக்க முடியாது என்பதை புலிகளின் தலைமை இன்னமும் புரிந்து கொள்ளவில்லையா?

*தமிழீழ புரட்சிகர தேசபக்த அமைப்புகளுடன், சிறீலங்காவின் புரட்சிகர அமைப்புகளுடன் கூட்டிணைந்து போராடி ''சுதந்திர தமிழீழத்தை'' புலிகள் படைக்கப் போகிறார்களா? அல்லது தமிழீழ தரகு முதலாளித்துவ கட்சிகளுடன் கூட்டிணைந்து, சிறீலங்கா தரகு முதலாளித்துவ ஆளுங்கட்சிகளுடன், அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தி ஒரு ''புதுக்கொலனிய தமிழீழத்தை'' உருவாக்கப் போகிறார்களா? புலிகளின் தலைமைக்கு முன் தேசிய விடுதலை இயக்க வரலாறு முன்னிறுத்தும் கேள்வி இது.*

'தமிழீழ சுதந்திர அரசை' நிறுவும் இலட்சியத்திற்காக தங்களின் இன்னுயிரை ஈய்த்த எல்லா இயக்கப் போராளிகளுக்கும், மாவீரர்களுக்கும், மக்களுக்கும் நாம் செலுத்தும் உண்மையான வீர அஞ்சலி. தமிழீழ சுதந்திர அரசை நிறுவுவதுதான், தமிழீழ புரட்சிகர தேசபக்த சக்திகளின் உறுதி மொழி இது.''

**- திலீபன் / தமிழரசன்**

www.tamilarangam.net



# ஆப்கான் யுத்தம் தரும் படிப்பனைகள்

சோவியத் வல்லரசுக்கு எதிராக அமெரிக்க வல்லரசியம் தொடுத்து வந்த நேரடி - மறைமுகப் போர்கள் மாறிவிட்டன. அமெரிக்க - ரசிய உயர்நிலை வல்லரசுகளும், முதலாளித்துவ அரசுகளும், புதுக்கொலனிய நாட்டு அரசுகளும் தங்களுக்கு இடையிலான போட்டியில், தாங்களே பணம், ஆயுதம், தங்குமிடம், பயிற்சி எனக் கொடுத்து ஊக்குவித்து வந்த எல்லைதாண்டிய அமைப்பாக்கப்பட்ட தனிநபர் பயங்கரவாதம். இப்போது அரசு பயங்கரவாதத்தை நோக்கி திரும்பிவிட்டது செப்டம்பர் 11, 2001-இல். அமெரிக்காவின் பொருளாதார மையமான 'உலக வர்த்தக மையத்தை' (WTC) இராணுவத்தலைமையகமான ''பென்டகனை'' (PENTAGON) குறிபார்த்து விட்டது. அணு ஏவுகணைத் தொழில்நுட்பத்தின், உளவுத் தொழில்நுட்பத்தின்தாய்நாட்டில், அமெரிக்க விமானங்களையே ஏவுகணைகளாகப் பயன்படுத்திய அதிர்ச்சி நடந்துவிட்டது. இது ஒரு வரலாற்றுப் பதிவு.

ஓசாமா பின்லேடனை, அல்-கொய்தாவை, ஆதரவு அளிக்கும் தலிபான் அரசையும் உடனடியாக குறிவைத்து தொடங்கப்பட்டுள்ள ''பயங்கரவாத எதிர்ப்பு யுத்தம்.'' இனி உலகம் முழுவதும் தொடரும் என்கிறது அமெரிக்க அரசு. அமெரிக்க-ரசிய வல்லரசுகள் ஆப்கானில் 22 ஆண்டுகளுக்கு முன் தொடங்கி வைத்த யுத்தம் இன்று ஒரு புதிய வடிவம் எடுத்துள்ளது. அமெரிக்காவின் (C.I.A.) உளவு நிறுவனத்தால் அன்று ஊக்குவிக்கப்பட்ட 'விடுதலை வீரராக' அறிமுகம் செய்து வைத்த பின்லேடனுக்கு எதிராக, இன்று அமெரிக்கா உலக பயங்கரவாதியாக அவரைக் காட்டி, அவரை அழிப்பதாக கூறி ஆப்கான் நாட்டின் மீது ஒரு ஆக்கிரமிப்பு யுத்தம் நடத்துகிறது. அமெரிக்க அரச பயங்கரவாதத்தின் இரட்டை முகம் இது. ''பயங்கரவாதத்துக்கு எதிரான போர்'' என்ற பெயரில் அமெரிக்கா தலைமையிலான NATO ஆக்கிரமிப்புக் கூட்டணி 50 நாட்களை தாண்டி நேரடி யுத்தத்தை நடத்துகிறது. 21-ஆம் நூற்றாண்டின் முதல் நவீன யுத்தம் என்கிற அளவுக்கு யுத்த சாதனங்கள், யுத்த முறைகள், யுத்த தந்திரங்கள் அரங்கேறி வருகின்றது. ஓசாமாவையும் - ஓமரையும் மட்டும் அழிப்பதற்கான, பயங்கரவாத எதிர்ப்பு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யுத்தம் மட்டும் அல்ல இது. அமெரிக்கா தலைமையிலான நவீன உலகமயமாக்கலுடன் முரண்படும் அரசுகளுக்கும், நவீன உலக மயமாக்கலுக்கு எதிரான உலக மக்கள் அனைவருக்கும் விடுக்கப்படும் **'எச்சரிக்கை யுத்தம் - போர்'** இது. இது முடிவல்ல! தொடரும் என்பது உண்மையிலும் உண்மை. சோமாலியா, சூடான், யேமன், ஈராக் - என தொடரலாம்.

நான்கு ஆண்டுகளாக, மூன்று நாடுகளால் மட்டும் அங்கீகரிக்கப்பட்ட தலிபான் அரசு, 50 நாட்களில் அடித்து நொறுக்கப்பட்டுள்ளது. ஆப்கானில், தலிபான் - அல்கொயிதா படைகளில் இருந்த ஆயிரக்கணக்கான உலக **இஸ்லாமியப் போராளிகள்** சுற்றி வளைக்கப்பட்டுள்ளனர். நேரடியாக அய்நா சபையிடம் (UN) சரண் அடைய முயன்று, அய்நா சபையால் கைவிடப்பட்டவர்களை, வடக்கு கூட்டணியிடம் சரண் அடைந்தவர்களை அமெரிக்க விமானம் குண்டு வீசி குண்டுஸ்ல் அழித்துள்ளது. அய்நாவின் - அமெரிக்காவின் 'போர்விதி' எங்கே போனது? அமெரிக்கா தலைமையிலான வல்லரசு அமைப்பின், உலக நலனுக்கான அமைப்பு 'அய்நா சபை' (UN) சோமாலியா, ருவாண்டாவுக்கு அடுத்து ஆப்கானிலும் இது நிரூபிக்கப்படுகிறது. அமெரிக்க - பிரித்தானிய தரைப் படைகள் நேரடியாக - வெளிப்படையாக ஆப்கானில் ஆக்கிரமிப்பு யுத்தம் செய்கின்றன. ஒசாமாவின் - ஓமரின் இரத்தத்தை தாங்களே குடிக்க வேண்டும் என்ற பிரச்சாரத்துடன், ஆப்கானில் நேரடியாக தங்களின் தலையை நுழைத்துவிட்டன. ஆப்கானை மறுசீரமைக்கவும், அகதிகளை சரியாக பராமரிக்கவும் தங்களின் படைகள் நேரடியாக ஈடுபடுவதாக பிரிட்டன் அறிவிக்கிறது. ஒருபுறம் ஆக்கிரமிப்பு யுத்தத்தை நடத்திக் கொண்டு மறுபுறம் ஆப்கான் அகதிகளுக்கு உணவும், மருந்தும் போடும் வல்லரசிய நவீன சூழ்ச்சிகளை பார்க்க முடிகிறது. **'தலிபான்களுக்கு பின் ஆப்கான் அரசு'** உலக ராஜதந்திரிகளின் முக்கிய ஆய்வுத் தலைப்பு இது. **''பரந்த அரசு''** அமைப்பது பற்றி, ஜேர்மன் தலைநகரில் அய்நா சபை ஏற்பாட்டில் முதல் சுற்றில் 21 பிரதிநிதிகள் கூட்டம் நடக்கிறது. ஆப்கானில் மூக்கை நுழைத்துள்ள அனைத்து அன்னிய அரசுகளின், அவர்களின் நலன்காக்கும் உள்நாட்டு ஆப்கான் குழுக்களின் அனைத்துப் பிரிவினரும் பங்கேற்கும் **'பரந்த புதிய அரசு'** பற்றிப் பேசப்படுகிறது. ஆப்கானிஸ்தானின் பரந்துபட்ட உள்நாட்டு மக்களின், தேசிய இனங்களின் சுதந்திர அரசாக பிரச்சாரம் செய்து ஏமாற்றுகின்றன. அன்னிய அரசுகளைச் சார்ந்து, அவ்வரசுகளின் பொருளாதார - அரசியல் இராணுவ நலன்களுக்காக, உள்நாட்டு மக்களின் உண்மையான பிரச்சனைகளை திசைதிருப்பி,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உள்நாட்டில் யுத்தம் புரியும் "போர்க் குழுக்கள்" வெவ்வேறு அன்னிய நாடுகளின் அரசுகளுக்காக இயங்கும் அன்னிய சார்பு யுத்தக் குழுக்களுக்கு ஆப்கானிஸ்தானின் இன்றைய யுத்த நெருக்கடி பாடம் புகட்ட வேண்டும்.

உலக உயர்நிலை வல்லரசுகளுக்கு இடையிலான முரண்பாட்டை, வல்லரசிய - முதலாளித்துவ அரசுகளுக்கு இடையிலான முரண் பாட்டை, வல்லரசிய முதலாளித்துவ அரசுகளுக்கும், புதுக் கொலனிய (மூன்றாம் உலக நாடுகள்) நாட்டு அரசுகளுக்கும் இடையிலான முரண் பாட்டையும் பயன்படுத்துவது. அரசுகளுடன் - கொம்யூனிஸ்ட் கட்சி கட்ட வேண்டிய மூலோபாய ரீதியான அய்க்கிய முன்னணிக் கொள்கை - கோட்பாட்டை (மூன்றுலகக் கோட்பாடு) இன்றும் முன்னிறுத்தும் கொம்யூனிஸ்ட் கட்சிகளும், அமைப்புகளும் கூட தங்களின் தவறான அய்க்கிய முன்னணிக் கோட்பாட்டுக் கண்ணோட்டத்தை, நேரடியாகக் கிரகித்து திருத்திக் கொள்ள, இன்றைய ஆப்கான் மீதான ஆக்கிரமிப்பு யுத்தக் கூட்டணி நடத்தைகள் உதவமுடியும். குறிப்பான நாட்டின் மீது ஆக்கிரமிப்பு நடக்கும்போது ஆக்கிரமிப்பு எதிர்ப்பு தெரிவிக்கும். அனாக் கிரமிப்பு நிலைப்பாட்டை வெளிப்படையாக எடுக்கும் அரசுகளுடன் ஒரு தந்திரோபாய ரீதியான அய்க்கிய முன்னணியை கட்ட முடியும். இது ஆக் கிரமிப்புக்குள்ளான நாட்டின் புரட்சிகர கட்சி எடுக்கக்கூடிய நிலைப் பாடு. ஆனால் இவ் அய்க்கிய முன்னணியை ஒரு மூலோபாய ரீதியான அய்க்கிய முன்னணியரசு பார்ப்பதும், நடப்பதும், அதற்கும் அப்பால் இதை ஒரு சர்வதேச புரட்சிகர கோட்பாடாக முன்னிறுத்துவதும், புரட் சிகர கட்சியை வர்க்க சமரசத்துக்கு இட்டுச் செல்கிறது.

ரசிய ஆக்கிரமிப்புக்கு எதிராக அமெரிக்க வல்லரசுடன் மட்டும் அல்ல. மூன்றாம் உலக நாடான பாகிஸ்தான் அரசுடன் ஆக்கிரமிப்பு எதிர்ப்பு அடிப்படையில் கூட்டணி அமைத்து செயற்பட்ட ஆப்கான் கட் சிகளின் நிலை என்னவானது? மறுபக்கம் அமெரிக்க உயர்நிலை வல்லர சுக்கு எதிரான ஈரான் அரசுடன் கூட்டணி அமைத்து செயற்பட்ட ஆப்கான் கட்சிகளின் நிலை என்னவானது?

மாறி மாறி அன்னிய அரசுகளின், வல்லரசுகளின் ஆக்கிரமிப்பு வேட் டைக்காடாக ஆப்கான் மாற்றப்பட்டுள்ளது. ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்கக் கூட்டணியின் ஆக்கிரமிப்பு யுத்தம், தெற்காசியாவிலும் பல

www.tamilarangam.net



புதிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. தெற்காசியாவின் அணு ஆயுத நாடுகளும், அமெரிக்க - ரசிய வல்லரசுகளின் முன்னய பிராந்தியப் போட்டி நாடுகளான பாகிஸ்தானும் - இந்தியாவும், இன்று அமெரிக்கா தலைமையிலான உலக ஒழுங்கு முறைக்குள் இணைக்கப்பட்டுவிட்டன. சிறீலங்காவின் திருகோணமலை துறைமுக முக்கியத்துவம் மாறிவிட்டது. சென்னைத் துறைமுகத்தில் தரித்து நின்ற அமெரிக்கப் போர்க்கப்பல்களில் இருந்த உலங்கு வானூர்திகள் உளவு பார்க்கின்றன. இந்த இரண்டு நாடுகளும் போட்டி போட்டுக் கொண்டு அமெரிக்க கூட்டணியில் இணைய முயன்றன. பூகோள அரசியல் இராணுவத் தேவைகள் நிமித்தம் பாகிஸ்தான், அமெரிக்க ஆக்கிரமிப்புக் கூட்டணியில் முதலிடத்தை பெற்றுள்ளது. பாகிஸ்தான் அரசு தான் நேரடியாக முன்னின்று உருவாக்கிய தலிபான் அரசை, அமெரிக்க கூட்டணியில் சேர்ந்து அழிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இந்தியரசு தனக்கெதிரான தேசிய இனவிடுதலை இயக்கங்களை, புரட்சிகர மக்கள் அமைப்புகளை நசுக்கவும், சர்வதேச ரீதியாகவும் ஆப்கானிலும் தனது ''பயங்கரவாத எதிர்ப்புச்'' செல்வாக்கை அதிகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

அமெரிக்காவின் ''பயங்கரவாத எதிர்ப்பு யுத்தம்'' என்ற உலக பிரச்சாரத்தை பயன்படுத்தியபடி, தெற்காசிய நாட்டு அரசுகள், உள்நாட்டு மக்களின் சமூக விடுதலைப் போராட்டங்களை, தேசிய இன விடுதலைப் போர்களை, உலகமயமாக்கலுக்கு எதிரான போராட்டங்களை உலக அரசுகளின் ஆதரவுடன் அழித்தொழிக்க மேலும் தீவிரம் காட்டுகின்றன. அமெரிக்க, பிரிட்டன் அரசுகள் தற்போது நிறைவேற்றிவரும் புதிய சட்டங்கள் போல் புதிய ஒடுக்குமுறைச் சட்டங்களை கொண்டு வருகின்றன. இந்திய அரசின் 'பொடோ' (POTO) சட்டம் குறிப்பிடத்தக்கது. நேபாளத்தின் தலைநகரில் 2002 தைமாதம் நடக்கவுள்ள 'சார்க்' அமைப்பு கூட்டம் புதிய கூட்டு முடிவுகளை எடுக்கலாம். நேபாளத்தில் அடைந்துள்ள கொம்யூனிஸ்டு புரட்சி எழுச்சியை நசுக்க ''நெருக்கடி நிலை'' பிறப்பிக்கப்பட்டுள்ளது. கவனிக்கத்தக்கது. உலக அரசு பயங்கரவாதத்தை தோற்கடிக்க, உலக புரட்சிகர மக்கள் அமைப்புகள், புரட்சிகர தேசிய விடுதலை இயக்கங்கள், புரட்சிகர கொம்யூனிஸ்டுக் கட்சிகள் ஒரணி திரள்வது வரலாற்றுத் தேவை.

— மரியா

www.tamilarangam.net



# Co-ordination Committee of Maoist Parties and Organizations of South Asia (CCOMPOSA)

## Condemn, Oppose and Resist US War Efforts!

U.S. imperialism, the number one enemy of people across the world and main source of world terrorism, has turned to war after the unprecedented attacks on the World Trade Center, the symbol of imperialist financial might and on the Pentagon, the center for military brutality the world over. We emphasize the fact that it is ridiculous and unbecoming of American butchers to shed tears for the dead ones. It is U.S. imperialism which always trampled underfoot aspirations of democracy, equality and freedom for so many decades, and is now masquerading as saviour against terrorism. It has the ghastly record of dropping atom bombs on Japan, butchering thousands and thousands of freedom-loving Vietnamese, resorting to large-scale napam bombing in Vietnam, unleashing frequent missile attacks on Iraq, killing lakhs [hundreds of thousands] of people in various parts of the world and so on.

It is none but American imperialism that is interfering in the internal affairs of other countries, engineering coups and counter-coups, toppling elected governments in various countries by providing various lethal weapons to anti-democratic forces and encouraging them to take up terrorist activities. It oversees the world's people, bullying the opposition with economic embargoes and starving millions of people all over the world to death. It is encouraging and practicing racism everywhere.

This savage imperialism is now howling at being hurt and humiliated by the strikes at the very heart of its financial and military might. The U.S.A. is now shoring up support of other states in its deadly military mission in Afghanistan. It even rejects the UN in its "Operation Infinite Justice", to let loose the floodgates of injustice against humanity.

In the course of this development, people worldwide are gradually registering their protests against this heinous act of US

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



imperialism. Even a good number of USA citizens are raising their voice against this declaration of war. It indicates that in future all peace-loving democratic people worldwide will put up a strong resistance against war.

A black pall is descending on this part of the world. Not only the people of America and the likely victims of the American beastly attacks, but the whole of the international community is drifting towards a bloodbath of unimaginable proportions.

We strongly condemn the warmonger U.S. trying to drag the World towards a massive war. We appeal to all peace-loving democratic people to oppose U.S. war efforts in every possible way. We condemn the servile role of the reactionary governments of this region, including India, Nepal, Bangladesh, Sri Lanka and Pakistan, who dance to the tune of U.S. imperialism in the name of countering terrorism.

Let us redouble our initiatives and effort to resist imperialism by rallying the people worldwide and specially those of South Asia. Let us build up a strong and mighty anti-imperialist movement in these regions and spread it throughout the world.

***Co-ordination Committee of Maoist Parties and Organizations of South Asia (CCOMPOSA)***
**Communist Party of Nepal (Maoist)**
**Communist Party of India (Marxist-Leninist)(People's War)**
**Maoist Communist Centre (MCC)**
**Revolutionary Communist Centre of India (MLM)**
**Revolutionary Communist Centre of India (Maoist)**
**Communist Party of India (ML)(Nakshalbari)**
**Purba Bangla Sarbahara Party (CC)**
**Purba Bangla Sarbahara Party (Maoist Punarghathan Kendra)**
**Bangladesh Samyabadi Party (ML)**
**Communist Party of Ceylon (Maoist)**

24 September 2001

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழீழ புதிய சனநாயக கட்சி (தமிழீழம்)

# தேசபக்தன்

"சிறு துளி பெரு வெள்ளம்" அன்பளிப்பு 15 உருபா / வெளிநாடு 1 $ டொலர்

தமிழீழ புதிய சனநாயக கட்சி தி.பி. 2032 (2001) இதழ் 21

மடல் தொடர்புகளுக்கு மட்டும்

EDITOR
67, PARKWOOD
VILLEGE DR
# 308 DONMILLS
ONTARIO
M 34 2x4
C A N A D A

T. ARASAN
POST BOOKS-256
NYBORG
5871 BERGEN
N O R W A Y

e.mail: Patriot_editor@Yahoo.com

www.ndpt.org

RGSD.ISSN-07647-2262 RNI 04512/1999 CANADA

N D P T

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்